REGD 4642 W

சந்தா விபரம்
—
ஆண்டு ரூ 7,
,, 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 18-6-50 | இதழ் 51

★

"வகுப்பு வெறி"-தன் கோர வாய்களைத் திறந்தவண்ணம் பயங்கரத் தோற்றத்துடன், 'வாடியுழல்வோரை' விழுங்கத் திட்டமிடு கிறது! வாழ்க்கையில், பிற்போக்காளராக ஆக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு நீதி வழங்கப் படுவது காண கோதித்து எழும்புகிறது — 'கூடாது! வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்' என்று கூச்சலெழுப்பிக்கொண்டு!

★

—சிறு கதை—

★ மிஸ்டர் சுய புராணம் ★

—தில்லை வில்லாளன் பி. ஏ. ஆனர்ஸ்.—

"ஒரு கப் காபி வேணுமே!"

"ஊரிலே ஒருத்தனும் புதிதா ஓட்டல் வைக்கலியே!"

"ஏண்டா?"

"பழைய ஓட்டல்காரப் பசங்க தான் காபியைக் கொடுத்துவிட்டு கண்ட இடங்களிலும் பணம் கேக்கிறுன்க"

"அவனுவ கெடக்கிருன்க, பிச்சைக்காரப் பயல்கள்.........சுத்த வெங்கப் பசங்கள்!"

"திட்டிப் பேசிப் பலன்......கப் காபிக்கு வழியில்லிங்களே!"

"போடா, போ...போக்கத்தவனே, அம்பிகா லாட்ஜ் என்று அடுத்த வீதிக் கோடியிலே ஒருத்தன் நேற்று தான் ஓட்டல் திறந்திருக்கிருன். போய்க் கேளுடா...முயற்சி செய்து பாருடா...உழைப்பில் வாரா, உறுதிகள் உளவோ?"

"போதுமே, உபதேசம்......நான் வந்து உங்ககிட்டே சிக்கினேனே! நல்ல உத்தியோகம்......"

எஜமானன், வேலைக்காரனோடு உரையாடிக்கொண்டிருந்தார். பேச்சு விசித்திரமாகத்தானிருக்கும்! இவர், முதலில்லாத முதலாளி. அவருக்கிருக்கிற முதலெல்லாம் அடிக்கடி வாடகைக்கு வாங்குகிற வெள்ளை சட்டை, வேட்டி, சரிகைத் துண்டு, மழுங்க சிவிய கிராப், தங்க பிரேம் போட்ட மூக்கிலே மின்னலிடும் கண்ணாடி, 'ஜாஸ்மைன்' மணம்......... அவித்து அவித்துக் குடிக்கிற அரையணு வெண்சுருட்டு, அர்த்தமில்லாமல அடிக்கடி ஓடியாடி விளையாடும் பச்சைச் சிரிப்பு, பகட்டான வார்த்தைகள்.........! இவைகளின் துணையைக் கொண்டு அவர் தன் வாழ்க்கை வியாபாரத்தை நடத்துகிறார். இதிலே வேலையாள் வேறு — அவனுக்குச் சம்பளம்!—

இத்தனையும் சினிமாப் படத்திரையில் கண்டேன். அந்தப் படத்தில் இம்மாதிரி ஒரு பாத்திரத்தை நுழைத்துவிட்டார்கள்.

X X X

படம் ஓடிக்கொண்டிருந்தது. நான் சிகரெட் டின்னிலிருந்து ஒன்றை எடுத்து பற்றவைத்தேன். அப்பொழுது எங்கோ அமர்ந்திருந்த ஒரு ஆசாமி, என் பக்கத்தில் காலியாக இருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்தான்.

"சார், ஒரு சிகரெட்!" என்றான் வந்தவன். நான் திரும்பினேன், அவன் என் முழுக் கவனத்தையும் ஈர்த்துவிட்டான். அவனிடம் ஏதோ ஒரு கவர்ச்சி சக்தி இருந்தது. இல்லாவிட்டால், ஓரே பார்வையில் அத்தகைய உள்ளுணர்ச்சியை எழுப்பிவிடமுடியாதல்லவா?

ஓடிக்கொண்டிருந்த சினிமாப் படத்தைக்கூட பார்க்கவில்லை—அவனைப் பார்த்தேன்! அவனும் என்னுடன் பேச ஆரம்பித்துவிட்டான்.

"உங்களை எங்கேயோ பார்த்த மாதிரிபிருக்கு......குரலும் பழக்கமானதாகவே தோணுது!" என்று தனது நீண்ட உரையாடலுக்கு முன்னுரை பேசினுன், அவன்.

"இருக்கும், இருக்கும்" என்று இழுத்தேன், நான்.

"என்னை உங்களுக்குத் தெரிகிறதா?" என்று அடுத்த கேள்வியை வீசினுன்.

"அரைகுறையாகத் தெரிகிறது!" என்றேன், ஓபபுக்காக! தெரியாது என்று சொலவது அவ்வளவு மரியாதையாக இல்லையல்லவா?

"என் பெயர் தெரியுமா? தெரிந்திருக்கவேண்டுமே!"

எனக்கு ஆளையே தெரியாது. 'சும்மா'வாவது தெரியும் என்று சொல்லிவைத்தேன். அவன் விடுவதாகத் தெரியவில்லை. நானும் என் 'குட்டை' மறைக்க, அவன் போக்கிலேயே என் விடைகளை அள்ளி தொடங்கிவிட்டேன்.

"உங்க பேர்......மன்னிக்க டும். நெஞ்சிலிருக்கிறது, சொல் தான் முடியவில்லை"

"பரவாயில்லை...என் பெயர் டர் சோள்ளமுத்து. மதுரை என்னைத் தெரியாத சிறு குழ கூட இல்லை" என்று அவன் னைப்பற்றி அறிமுகம் செய்ய பித்தான்.

எனக்குக் கொஞ்சம் சலி தட்ட ஆரம்பித்தது. அவன் ஏன் பேச்சுக் கொடுத்தோம் எ கூடத் தோன்றியது! இருந்தா அவன் வசயைப 'பிடுங்கி' வேடி பார்க்கவேண்டும் என்று என னேன். அவனோ, முடுக்கிவிட்ட பரம்போல நிறுத்தாமல் கொண்டே இருந்தான்.

"என்னைப்பற்றி யாரைக் கே லும் சொல்லிவிடுவாங்க, இ மதுரை மாநகரில்! இந்த ஊ இருக்கிறுரே, மருகமுத்துக் க டர், கோடீஸ்வரர்! அவர் என மிக நெருங்கிய நண்பர். பட கிறுரே, பக்தவத்சல நாயுடு, எனக்குக் 'கிளாஸ்மெட்'... சி ஸ்டார் சிங்காரி, என்னை அண் அண்ணேன்னு விடமாட் என்று அடுக்கிக்கொண்டே ஆரம்பித்தான்.

என்னுல் சகித்துக்கொண்டி முடியவில்லை. என்ன செய் "போதும், நிறுத்துமய்யா, புராணத்தை......" என்று வும் மனம் வரவில்லை. ஆகவே, வற்றிற்கும் வேண்டா வெறு 'ஆமாம்' போட்டேன். என்னை விட்டுவிடுவதாக மேலும், மேலும் பேசிக்கொ இருந்தான். நல்ல காலம்... அருகிலிருந்தவர்கள் என்னை பாற்ற முன்வந்தார்கள்!

"ச்ச்சு......ச்ச்சு" என்ற சத்தம் தலில்!

"ஓய், சும்மா எனய்யா பேசி டேயிருக்கே! மத்தவங்க படம் க்க வேணுமா?" என்று கேட் ன் ஒருவன், கொஞ்சம் கோபத் டு!

சிறிதுநேரம் மௌனம் நிலவியது. டர் சொள்ளமுத்து கொஞ்ச ம் வாயை மூடிக்கொண்டிருந் ன் எனக்கும் ஒரு பெரிய விபத் திருந்து தப்பியதுபோன்ற ணர்ச்சி ஏற்பட்டது.

X X X

அப்பொழுதும் படம் நடந்து ண்டிருந்தது.

படத்திலே வருகிற அந்த விசித் ப் பேர்வழிக்குப் பெயர் ஹம்பக் ண்டி! அவன் எப்படியோ ஒரு னிமாக்காரியின் நட்பைச் சம் தித்து விடுகிறான். அவளை ழைத்துக்கொண்டு, கூட்டை டத்துக்கொண்டு வெளியேறுகி ன்! ஒரு பெரிய நாடகக் கம் பனியை ஆரம்பிக்கிறான். குடியும், த்தியும் பெருத்து பெரிய இழப்பு துவிடுகிறது!

கதையின் இந்தப் பகுதியைப் ர்த்துக் கொண்டிருந்தபொழுது, ந்தப் பேர்வழி மீண்டும் பேசத் டங்கிவிட்டான்—ஆபத்து ஆரம் த்துவிட்டது!

"பணம் எனக்குப் பெரிதில்லே. ன்னைக்கு நினைச்சால் இரண்டு லட்சம் வாங்கமுடியும்! ஆனால் க்கு குணத்திலே மதிப்பு...இந்த முதலாளி மிருகானந்த முதலி ர் ஒரு நாள் ஏதோ கடுமையாகப் பிஞரு.........அன்னையிலிருந்து வர் சிநேகிதத்திற்கு ஒரு கும்புடு ட்டு விட்டேன்...பிறகு நூறு றை அழைத்திருப்பாரு, காலடி டுத்து வைக்கலே சார்!" என்று வன் பேசிக்கொண்டிருக்கும் ழுது நான் ஒரு சந்தேகத்தைக் ப்பினேன்.

ஏனுங்க, உங்களுக்கு இந்த பஸ் பாஸ்கர முதலியாரைத் தெரி ?" என்று கேட்டதுதான் தாம —அவன் மடை திறந்ததுபோல ர்த்தைகளைக் கொட்டி யளந்து ான்.

"என்ன அப்படிக் கேக்கிறீங்க... பாஸ்கரன் எனக்கு ரொம்ப ரொம்ப வேண்டிய பிள்ளையாண்டான்; தம் பின்னுதான் கூப்பிடுவேன். என் மேலே அவனுக்கு உசிரு! அவன் கிட்டே ஏதாவது காரியமாகணுமா, சொல்லுங்க, நான் முடிச்சு தாரேன்."

"அப்படியொன்றும் பிரமாதமான காரியம் ஒண்ணுமில்லே. காருக்கு சில ஸ்பேர் பார்ட்டுகள் வாங்கணும்!" என்று கொஞ்சம் உண்மையையும், பொய்யையும் கலந்து சொன்னேன்.

"அதுக்கென்ன வாங்கிவிட்டால் போச்சு...........அதுகிடக்கட்டும், இதோ வருகிறதே ஒரு குட்டி! அவ இந்த ஊர்தான்......சினிமாவிலே நான்தான் சேர்த்துவிட்டேன், அவபேரு குப்பம்மாள். சினிமாவிலே சேர்க்கிறது எனக்கொன்னும் பெரிய காரியமில்லே! நாம் ஒரு காரியம் செய்தோமின்னு நல்ல விதமாக இருக்க வேணுமோ! அதுக்குத்தான் இண்டர் நேஷனல் பிராட் புரோடக்ஷன் எடுத்த எத்தனும், ஏமாளியும் என்ற படத்தில் சேர்த்து விட்டேன். இப்ப அவ பேரு மின்னல் குமாரி — அதுவும் நம்ம ஏற்பாடு! இன்னைக்குகூட இங்கே தானிருக்கிறாள். படம் விட்டதும் அங்கேதான் போகிறேன்; நீங்க எங்கே தங்கியிருக்கீங்க" அவன் விட்ட அவுட்டா அஸ்திரங்களை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவன் பேச்சு என்னைத் திடுக்கிடவைத்தது. ஏன்? அவன் ஒருவேளை இரட்டைப் பட்டந் தாங்கிய இரவு ராசாவோ என்று சந்தேகித்து விட்டேன். அவன் பேச்சு அப்படி என்னை நினைக்கவைத்ததில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. இரவு நேரம்—அதுவும் தனிமைப் பிரயாணம்! அவன்தான் அதைப் புரிந்துகொண்டு வெகு நேரமாகிவிட்டதே!

"நம்ம வீடு கடல்போல இருக்கு; இன்னைக்குத் தங்குவதானால் தங்கலாம். என்னங்க நான் சொல்றது புரியுதுங்களா?..." என்று மேலும் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான்.

"சொல்றவன் மனிசனுத் தெரியல்லே ஒரு தடவைச் சொன்னு புரியலேயா......மாடா, மனிசனு நீ...... கழுதை மாதிரி கத்திண்டே இருக்கியே!" என்று சுடச் சுடப் பேசி விட்டான் பக்கத்து ஆசாமி.

"ஆள் தெரியாமப் பேசுறான்...... அயோக்கியன்..." என்று குசுகுசுவென்று கூறிவிட்டு, வாயை மூடிக் கொண்டான் சொள்ள முத்து.

X X X

அன்று பார்த்த படத்திற்குப் பெயர் சுய புராணம். அந்தப் படம் காலத்திற்கு ஏற்றது. கருத்துகள் மலர்ந்த பூக்காடு! அருமையான நீதிக் கனிகள் குறையாது நிறையத் தரும் பழத்தோட்டம்! — எனக்கு அப்படம் மிகவும் பிடித்திருந்தது.

இன்றைய உலகில் நேர்மைக்கு உள்ள மதிப்பு குறைவு—மிகமிகக் குறைவு! நீதியும், ஒழுக்கமும் நிலைத்து நிற்கக்கூடிய நிலைமை அமைந்துள்ளதா, இந்த நிலைமையில் என்று நமக்குப் புரியவில்லை.

இன்று உலகில் உள்ள போலிக் கௌரவம், பொய் மதிப்பு இவைகளை எண்ணிப் பார்த்தால் சிரிப்புதான் வருகிறது. இந்த உலகத்தில் முழு அனுபவம் கிடைத்தவன் இதைப் பார்த்து உரக்க உரக்கச் சிரிப்பான்—கேலியாக, கிண்டலாக!

அந்தக் கதை, வாழ்க்கைப் பிரச்சினையை இந்தக் கோணத்திலிருந்து பார்க்கிறது! அந்த முறையில் தட்டுப்படும் சம்பவங்களைப் பின்னிக் கோத்த வண்ணச் சித்திரம் அந்த திரைப் படக் கதை.

ஆண்டியப்பன் சின்னஞ் சிறு வயதிலிருந்து வறுமையிலே உழல்கிறான். அந்த வறுமைத் திரையைக் கிழித்துக் கொண்டு வாழ்க்கைப் படத்தைக் காண முயற்சி செய்கிறான். அவன் முயற்சி எங்கெங்கோ இழுத்துக்கொண்டு போகிறது. இறுதியாக ஹம்பக்ஆண்டியாகிறான், அவன் வாழ முடிகிறது!

ஆனால் வெறும் ஆண்டியப்பனாக இருக்கும்பொழுது அவன் பட்டினியும், பசியுமாகக் கிடக்கவேண்டியிருக்கிறது. ஊரிலே ஒருவரும் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை.

இந்த உயரிய தத்துவத்தை எப்படி மக்களுக்குக் காட்டுவது? ஆனால், இதை மக்கள் பின்பற்ற வேண்டும் என்று சொல்லவில்லை—

புரிந்து கொள்ளவேண்டும் என்பது தான் நம் எண்ணம்—படமெடுத்தவர்களின் குறிக்கோளும் அப்படியே இருக்கட்டும்!

ஆண்டியப்பன், தன் ஓரே தங்கையுடன் உலகில் எந்தவித ஆதாரமுமில்லாமல் விடப்பட்டான். அவன் தன்னையும், அருமைத் தங்கையையும் காப்பாற்றிக்கொள்ள முயற்சி எடுக்கிறான்.

ஆண்டியப்பன் கொஞ்சம் படித்தவன். ஆகவே எங்கு பார்த்தாலும் வேலை கேட்கிறான். கிடைக்கவில்லை. இரயிலடிகளில் மூட்டை தூக்குகிறான். காபி ஓட்டல்களில் மேஜை துடைக்கிறான். தினசரி பத்திரிகைகளை விற்கிறான்.

பிழைப்பு நடக்கிறது — ஆனால் முழுவாழ்வு கிடைக்கவில்லை! ஆண்டியப்பன் வாழ வழி தேடுகிறான். நேர்மை, நியாயம், நீதி அவன் வழியைத் தடுக்கிறது. ஆகவே, பசி அவனை வாட்டுகிறது. துன்பம் அவனை ஓட ஓடத் துரத்தியடிக்கிறது.

உலகில் பழகுகிறான். அவன் இதயம் இளகிய நிலைமையிலிருந்து இறுக ஆரம்பிக்கிறது.

ஒரு நாள், பசியோடு உலவுகிறான் ஆண்டி — அவன் சிந்தனை தீவிரமாக வேலை செய்கிறது! பக்கத்திலே ஒரு பெரிய உணவுக் கடை—துணிந்து உள்ளே நுழைகிறான். வேண்டிய அளவு—வயிறு வீங்க, வீங்க — உண்கிறான். கடைசியில் காபியைக் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போகிறான். பிறகு பில்லையும் கொண்டுவந்து வைக்கிறான். அவன் அதையும் எடுத்து நெட்டினான், நிறுத்தாமல்! பிறகும் வெளியேறவில்லை. பார்சல் பலகாரந் தருமிடத்திற்குப் போகிறான். ஒரு அணா காராபூந்தியை வாங்கிக் கொண்டு வெளியில் வந்தான். 'ஒரு அணா பார்சல்' என்று உரக்கக் கூவினான் அவன் — ஒரு அணாவைக் கொடுத்துவிட்டு வெளியேறிவிட்டான், பழைய பில்லை பையில் போட்டுக்கொண்டே—அவ்வளவுதான்!

அவன் தன் இதயத்தைக் கழற்றி வைக்கப் பழகிக் கோள்கிறான். பிறகு தங்கை தனத்தின் பெயரால் பணம் பிடுங்குகிற அளவு முன்னேறுகிறான்! ஆம், அவனது இதயம் இறுகியது மட்டுமல்ல, அடிக்கடி எடுக்கவும், வைக்கவுங்கூடிய அளவு தயாராகிவிட்டது!

தனத்தை, மைனர் மகாலிங்கத்திற்கு மணம் முடித்தே தருகிறான்.

பிறகு ஹம்பக் ஆண்டி, சினிமாக்கார சிங்காரியை வலைவீசிப் பிடிக்கிறான்!

சமூகத்தில், ஆண்டியப்பன், ஹம்பக் ஆண்டியாகிறான்! அது மட்டுமல்ல, அதிலே சிங்காரியின் முன்னாள் மணவாளன் ஒரு முதலாளி—காமப் பிள்ளை. அவன் எவ்வளவு சுயவிளம்பரம் போடுகிறான். எப்படித் தன் இரும்புப் பெட்டி நிலையைக் கொஞ்சமும் ஆடாமல், அசையாமல் இருக்க பலவித மாரீசங்கள் புரிகிறான். தனது அயோக்கியத்தனங்கள் அத்தனையையும் மறைக்க, செய்த மாய் மாலங்கள், ஒந்தித்தனங்கள் எத்தனையோ!.........

ஆண்டி, காமப்பிள்ளையை அண்டுகிறான், மீண்டும். தன் சுய புராணத்தைப் பலரிடம் பேசிக் குல்லாய் போடுகிறான். அவன் இருக்கிறான், வாழ்கிறான்!

சமூகத்தின் கோணல் மாணலான போக்கினால் ஹம்பக் ஆண்டி தோன்றுகிறான். காமப்பிள்ளையும் இருக்கிறான். இருவரும் வாழ்கின்றனர்!

வாழ்க்கை வியாபாரமாகிறது—வாழ்வு பெற வணிகமுறை கையாளபபடுகிறது!

இந்த உண்மையை நடுப் புள்ளியாக வைத்து, ஏராளமான நிகழ்ச்சிகளை இப்படியும், அப்படியுமாக இணைத்து, ஒரு அழகான படத்தை உருவாக்கியிருந்தார்கள்.

படமும் முடிந்தது—திடீர் நண்பர் சொள்ளமுத்து என்னைத் தொடர்ந்தே வெளியே வந்தான்.

X X X

"ஐயா, எனக்குப் பதினொரு மணிக்கு வண்டியிருக்கு......நான் போய்விட்டு வர்ரேன்......" என்று அவனை விட்டுப் பிரிந்துவிட முயன்றேன். அவன் பிசின் மாதிரி ஒட்டிக் கொண்டான். வழித்தெறிய முடியவில்லை!

"ஏனுங்க, இரவு தங்குங்களேன்......பாஸ்கரனை நாளைக்குப் பார்க்கலாமே!" என்று அவன் மீண்டும் வற்புறுத்தினான்.

எதிரில் இருந்த உணவுக் கடை
யில நுழைந்தேன். அவனும் வந்
தான். அவனுக்குத் திருப்தி ஏற்படு
கிற அளவு சாப்பிடும்படி சொன்
னேன். என் உபசார வார்த்தை
களுக்கு ஏதோ விடை சொல்லிக்
கொண்டு, பூரி, கிழங்கு, தோசை,
வடை, மிகுந்தது, மிச்சம்....என்று
தின்று தீர்த்தான்.

பில் கிடந்தது மேஜையில்—
விதவை பெற்றெடுத்த பிள்ளையைப்
போல! அதைத் தொடுவதற்குப்
அஞ்சி அஞ்சிச், சாவதைப் பார்த்த
நெஞ்சிரங்கி, நான் சாப்பிட்டு முடிப்
பதற்குள் எடுத்து என் கையிலே
வைத்துக்கொண்டேன்.

பிறகு வெளியில் வந்தோம். வெற்
றிலை பாக்கு, சிகரெட்...... அத்த
னையும் நான் வாங்கிக் கொடுத்தேன்.
அப்பொழுதாவது போய்த் தொலை
வானா என்று பார்த்தேன். போ
தாகத் தெரியவில்லை.

"நான் ஒரு லிமிடட் கம்பெ
ஏற்படுத்துவதாகத் திட்டமிட்
வேலை செய்கிறேன். இதுவரை ஷே
இரண்டு லட்சம் சேர்ந்துவிட்டது
சொள்ளமுத்து பிக்சர்ஸ் என்
பெயர் வைத்துப் படமெடுப்பது
படம் விநியோக உரிமை வாங்குவ
......இப்படி ஏற்பாடு செய்திருக்
றேன். எப்படிங்க என் முயற்சி....
சரிதானே......நீங்கள் சென்னை
யிலேதானே இருப்பது? நான் அடி
கடி வருவேன் சார்........பார்க்
றேன்" என்று பழையபடியும் சு
புராணத்தை அவிழ்த்துவிட்டான்

எனக்கு வந்த சிரிப்பை அடக்
வெகு பாடுபட்டேன். அது எனக்
அடங்காமல் உதடுகளைக் கிழித்து
கொண்டு வெளியில் வந்துவிட்ட

பிறகு இரயிலடிக்குப் போனே
அங்கேயும் அந்த அன்பன் அ
டைபோல ஒட்டிக்கொண்டு
தான். சரி, வந்தவனிடம் ஒருவே
யாவது வாங்கிக்கொள்ள வேண்
மென்று சென்னைக்கு ஒரு டிக்கெ
வாங்கி வரும்படி அனுப்பினே
அவன் திரும்பிவருவானா, அத்தே
"அப்ஸ்காண்டாகி" விடுவானா என்
சந்தேகத்தோடு ஒருகண்ணை அ
மீது வைத்தபடியே இருந்தே
என்னை யாரோ, கொஞ்ச
கழித்து, தோளில் தட்டுவது

(16-ம் பக்கம் பார்க்க).

மதுரை மாவட்ட மாநாடு

16-ம் பக்கத் தொடர்ச்சி

ஆங்காங்குள்ள மாவட்டங்களில் நமது கழகம் வளர்ந்துவரும் பெருமையை அறிவிப்பதுபோல ஐந்து மாவட்ட மாநாடுகள் நடைபெற்றுவிட்டன.

இத்தனைக்கும் — நாம் பண பலமடைந்தோரல்ல, 'பணம் பெருத்தான்'களும் நம்மிடம் கிடையாது. 'கேள், தருகிறேன்' என்று கொடுக்கும் பணக்காரர்களும் கிடையாது. எனினும், வளர்ந்திருக்கிறோம்-முடியாதவைகளைச் சாதித்து வருகிறோம் —மக்களின் மகத்தான ஆதரவால்.

அழகு கொழிக்கும் சோழவந்தானில், கடந்த 10, 11 தேதிகளில் நடைபெற்ற மதுரை மாவட்ட மாநாடு வளர்ந்துவரும் நமது வெற்றிக்கோர் எடுத்துக்காட்டு— மக்கள் மன்றத்திலே நமக்கேற்பட்டிருக்கும் செல்வாக்கின சித்திரம்.

மாநாடு குறித்து புகைப்படத்தைப் பாருங்கள் — முழுவதெல்லாம் நடைபெறுமே மாகாண மாநாடுகள் அவைகளைப் போலக் காட்சி தருவது தெரிகிறதல்லவா? பக்கம் காணக் காண ஆண்களும் பெண்டிரும் இரண்டு நாட்களிலும் கலந்து கொண்டனர்.

வாலிப வீரர்களும், வற்றாத கொள்கைப் பற்றுடையோரும் பலலாயிரக் கணக்கில் கூடியிருந்த மதுரை மாவட்ட மாநாட்டை குடந்தைத் தோழர் கே. கே. நீலமேகம் ஆரம்பித்துவைத்தார். அதுபோது அவர் ஆற்றிய வீரங்கலந்த சொற்பொழிவு, கருத்துக்கள் நிரம்பியதாயிருந்தது. 'எதையும் தாங்க இந்த இதயம் உண்டு' என்று எதிரொலிப்பது போல. ஆளவந்தாரின் அடக்குமுறைகளை மட்டுமல்ல, மாற்றாரின் வஞ்சகத்தையும்கூட வாட்டிவிடுவேன்! என்று, சீறிப் பாயும் சிங்கமென முழக்கமிடும் கூட்டத்தைச் சேர்ந்தவர் அவர்.

மாநாட்டுக்கு நண்பர் ஈ. வி. கே. சம்பத் தலைமை தாங்கினார். சம்பத்—நமக்கொரு 'சம்பத்து'! இளைஞர்களின் இதயங்களைத், தனது வீரப் பேச்சாலும், வேடிக்கைக் கிண்டல்களாலும் கவர்ந்தவர். மாணவருலகின் மதிப்பிலா ஒளியாக இருந்து, என் தொண்டில் முளைக்கும் தொல்லைகள் என் உள்ளத்தை மகிழ்விக்கும் மலரிதழ்கள்' என்ற எண்ணத்துடன், பணியாற்றி வருபவர்.

இன்சொல்லும் எடுத்ததை முடிக்குந்திறனும் 'எங்கே' என்று கேட்குமுன் 'இதோ' என்று எதையும் தரும் திறனுமிக்க வரவேற்புக்கழகத் தலைவர் ஆவுடையப்பன், சண்டை

(1) மாநாட்டில் பெண்கள் பகுதி
(2) மக்கள் திரளின் ஒரு காட்சி.

யிடுவோரையும் தன் நண்பனாக்கிக் கொள்ளும் சாந்தமும், சமரச நினைவுடன் தான் ஏற்றபணியைமுடிக்கும் வீர இதயமும், வெற்றி நினைவும் கொண்ட மாநாட்டுச் செயலாளர் அழகரடி எஸ். முத்து, எப்போதும் எந்நேரமும் இயக்க வளர்ச்சிக்கென இடுப்பொடியப் பாடுபடும் மாநாட்டு விளம்பர உறுப்பினர் மதுரை அய்யாச்சாமி, "ஓய்வு வேண்டேன் உறக்கமும் கொள்ளேன்" என்று உணர்ச்சியின் பிம்பமாகயிருக்கும் நிலக்கோட்டை காத்தான், 'கொள்கை பெரிது; குறைத்துப் பேசுவோர் என்னிடமிருந்து தப்புதல் அரிது, என்று குரல் தந்து தன் வாழ்வின் முக்கியகடமை நாட்டு நன்மைக்குப் பாடுபடுதலே' என்று பணியாற்றும் ஓயாவீரர் மாநாட்டுத் துணைச்செயலாளர் என். முத்து, நாட்டின்தொண்டே என் இலட்சியம் என்று எண்ணியதை முடிக்கவேண்டும் என்ற பேரார்வம் கொண்ட மாநாட்டு விளம்பர உறுப்பினர் மதுரை சேதுராமன் ஆகியோர், மாநாட்டின் வெற்றி குறித்து நினைத்தால் நமது கண்முன் நிற்கும் பெருமை படைத்தவர்கள்.

மாநாட்டை மட்டுமின்றி, மாவட்டத்தையே சிறந்த சிந்தனைப் பூங்காவாக்கத்திட்டமிட்டு வேலை செய்யும் இச்செயல் வீரர்களோடு ஒத்துழைத்த, எந்நேரமும், இயக்கம்! இயக்கம்!! என்று அலைந்து திரிந்து பணியாற்றும் மதுரை ராஜமான் சோழவந்தான் பழனியாண்டவர், தேனீ செல்லையா, மதுரை பிச்சை, முத்தியாலு, மாரி, ரங்கசாமி, மணிமுதலானோரின் ஆர்வம், மிகவும் பாராட்டற்குரியது. மாநாட்டை வெற்றிகரமானதாக்கவேண்டுமென்றவீர நினைவுடன் சலிப்பின்றி பாடுபட்ட இத்தகைய தொண்டர்களின் சேவையையும் மட்டிலா ஆர்வத்தையும் காண நம் இதயம் பெரு மகிழ்வால் விம்மியது. "இயக்கக்கொள்கைகள் ஏன் வளராது — மக்கள் ஏன் நம் கருத்தைக் கேட்பதில் ஆர்வம் காட்டமாட்டார்கள்—இத்தகைய வீரமணிகள் நம் கழகத்தின் தூதுவர்களாக நானுபக்கங்களிலும் உலவும்போது!" என்ற நினைப்பு இதயத்தில் மின்னியது.

*   X   *

மாநாடு துவக்கப்படுமுன் நாகூர் தோழர் ஹனீபா இயக்கப் பாடல்களைப் பாடி, மக்களைப் பேரானந்தத்திலாழ்த்தினர். அடுத்தபடியாக திரு

(9-ம் பக்கம் பார்க்க)

சூழல் விளக்கு

விஜய விஷயம்!

பவனி வந்து கொண்டிருக்கிறார் பண்டித நேரு, இந்தோனேஷியாவில், மக்களின் பேரார்வத்துக்கிடையே! டச்சு ஆதிபத்தியத்தின் கீழ் நசுக்குண்டு கிடந்த இந்தோனேஷியா சுதந்திரம் பெறவேண்டுமென ஆசையும் ஆர்வமும் காட்டியது, இந்தியா. எனவே தங்கள் விடுதலைப் போராட்டத்தை ஊக்குவித்த இந்தியத் தலைவர்மீது அன்பும் மரியாதையும் இருக்கத்தான் செய்யும் இந்தோனேஷிய மக்களுக்கு! நேருவுக்கும் அவர்களையும் அவர்கள் காட்டும் அன்மையும் காண ஆனந்தமாகத்தானிருக்கும்! ஆனால் நேரு விஜயத்தில் ஒரு விஷயம் இருக்கிறது. புதிதாக விடுதலை பெற்ற இந்தோனேஷியா "இந்தியா" போல பல காரியங்களைச் சாதிக்க முடியாது திண்டாடி நிற்கிறது. உள் குழப்பங்களும், எதிர்க் கட்சிகளும் சுகர்னோ சர்க்காருக்கு தொல்லைகளைச் சிருஷ்டித்துக் கொண்டுள்ளன. விடுதலை பெற்றால் வேதனை மடியும் என்று நம்பிய மக்கள் இன்று ஏமாந்தவர்களானதோடு சுகர்னோ சர்க்கார்மீது எரிச்சல் கொண்டும் வருகின்றனர்! இந்நிலையில் நேரு விஜயம் செய்கிறார்—அருகில் சுகர்னோவுடன்! பேசும் போது எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று நேரு இதோபதேசங்களும் நிகழ்த்துகிறார். எனவே விஜயம் சுகர்னோவுக்கு மங்கி வரும் செல்வாக்கைத் தூக்கி நிறுத்தும் எண்ணத்தால் சுகர்னோவால் ஏற்பாடு செய்யப்பட்டதோ என்று ஐயம் ஏற்படின் ஆச்சரியமில்லை!

நிச்சயம் நீடிக்காது!

'கம்யூனிஸ்டு—சுட்டுக் கொல்லப்பட்டார்'—இன்று, தினசரி இது போல ஏதாவதொரு செய்திகள் வந்தவண்ணமே உள்ளன. கம்யூனிஸ்டுகளின் நாசப் பாதையை நாம் எப்போதும் கண்டித்து வருகிறோம். சமுதாயத்தைக் கட்டுக்குள்ளாக்கும் வழிகளில் ஈடுபடுவோரை சட்டத்திற்கு முன் நிறுத்தி, நிச்சயம் தண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். ஆனால் அன்றன்றாடம் வரும் செய்திகளோ 'கம்யூனிஸ்டு தப்ப முயன்றார்—சுட்டுக் கொல்லப்பட்டார்' என்று சுருக்கமாக வந்துகொண்டிருக்கிறது. சமீபத்தில், ஒரு மாதத்துக்குள் தஞ்சை மாவட்டத்தில் சிவராமன், முருகையன், ஹிரண்யன் என்போர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். இவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியைச்சார்ந்த பிரமுகர்களாம்! இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதற்குக் காரணம் 'தப்ப முயன்றதுதான்' என்று கூறப்படுகிறது. ஆனால், பட்டுக்கோட்டை—திருத்துறைப்பூண்டி வட்டாரங்களில் பொதுமக்களைச் சந்தித்துக் கேட்டால் வெளியாகும் தகவல கண்ணீர் சிந்தக்கூடியதாக யிருக்கிறது. 'மேற்படி நபர்கள் போலீசார் வசம் சிக்கிய பின்......' என்றெல்லாம் கூறுகின்றனர். நாசகாரிகளை அடக்க வேண்டியதுதான். ஆனால் அதற்காக, சந்தர்ப்பத்தைச் சாக்காக வைத்து அவர்களை சாவுலகுக்கு அனுப்புவதை—நீதி, சகிக்காது! நேர்மை கண்ணீர் சிந்தும்!

கண்ணீர் சிந்தும் காட்சி!

'அந்தமானுக்காவது எங்களை அனுப்பிவிடுங்கள் என்று கேட்டிருக்கின்றனர் சென்னை நிதியமைச்சர் கோபால ரெட்டியாரை, பர்மா வாழ் தென்னிந்தியர்கள். விசாகை, நெல்லூர், கோதாவரி மாவட்டங்களிலிருந்து பர்மாவுக்குச் சென்று வாழும் 'ஏழைகள்' அமைச்சரைச் சந்தித்தனராம. "எங்கள் வேதனை தாங்க முடியவில்லை! நாங்கள் எல்லாம் ரிக்ஷா இழுத்துப் பிழைப்பவர்கள். முன்பு இங்கு 7,000 ரிக்ஷாக்களிருந்தன. சர்க்காரின் கெடுபிடியால் இப்போது 500 ரிக்ஷாக்கள்தானிருக்கின்றன. இவைகளைக் கொண்டு ஆயிரக்கணக்கான நாங்கள் எப்படி வாழமுடியும்? ஆகவே, எங்களை அந்தமான், நிகோபர் தீவுகளிலாவது குடியேறுமாறு ஏற்பாடு செய்யுங்கள்" என்று வேதனையோடு தெரிவித்திருக்கின்றனர். பொன் கொழிக்கும் திராவிடம்—எனினும் புசிக்க வழியற்று திரைகடல் கடந்து திண்டாடி நிற்கின்றனர் நமது சகோதரர்கள். 'அந்தமானுக்காவது அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள்' என்றனராம். அமைச்சர் 'ஆகா! இந்திய சர்க்காருக்கு விண்ணப்பம் அனுப்புங்கள்' என்றாராம். வெட்கம்! வேதனை!! கண்ணீரல்ல, இரத்தக் கண்ணீர் சிந்தவேண்டிய துயரச் சம்பவம்.

பையன் குறும்பு!

"சார்! ஒரு நாள் லீவு வேணும்" என்று கேட்டுக்கொண்டே வந்தான், நமது ஆபீஸ் பையன். எனக்கோ எரிச்சல் வந்துவிட்டது, "முடியாது, என்ன அடிக்கடி லீவு கேட்கிறே! நீ போய்விட்டால் யார் இங்கே வேலையெல்லாம் கவனிச்சுக்கிறது. முடியாதடா, போ!" என்று விரட்டினேன். கொஞ்சநேரத்துக்கெல்லாம் ஏதோ எழுதி என்னிடம் கொண்டு வந்து கொடுத்தான். என்ன போக்கிரித்தனம் பாருங்கள்! "சார்! ஒரு நாளைக்கு லீவ் தரமாட்டேன்கிறீங்க. ஏழைகன்னாலே ரொம்ப எளக்காரமாப் போச்சு! நான் லீவு எடுத்தே ஆறு மாசம் ஆவுது—ஒரு நாளைக்கு வரலேன்னா வேலை கெட்டுவிடும் என்று சொல்றீங்க. நிஜந்தான்! ஆனா, இந்த நாட்டையே ஆளுகிற மந்திரிமார்களைக் கேட்க நாதியாயிருக்குது. அவங்க பெரிய மனுஷருல்லே — நீங்களெல்லாம் பேசாமெயிருந்துடுறீங்க...இம்மாதம் முதல் தேதியிலேருந்து நானும்தான் பேப்பரைப் பார்க்கிறேன். இந்தியா பெரிய தேசமாம் — ஆனா அதை ஆளுறவங்க யோக்கியதை இது!

"பண்டித நேரு இந்தோனேஷியாவில்! கோபாலசாமி அய்யங்கார், உதகமண்டலத்தில! சந்தானம் அய்யங்கார் சென்னை மாகாணத்தில்! ராஜகுமாரி அமிர்தகௌரிஜினிவாநகரில்! ஜகஜீவன்ராமும் அதே நகரில! அம்பேத்கார் இலங்கையில்! ஆசாத் மத்திய கிழக்கு நோக்கி!—டெல்லி' காலியாயிருக்கிறது—நாட்டைக் காக்கிறவங்க அப்படியிருக்கிறாங்க. சாதாரணமான நான் ஒரு நாள் லீவு கேட்டா இப்படி...!" படித்தேன்—பரிதாபமாகப் பார்த்தேன் அவனை! வேறு என்ன செய்யமுடியும்?

பயங்கரப் பரீட்சை!

"வயதான கிழங்கிட்டைகளுக்குத் தருகிற பட்டங்களை இந்தப் பாழும் படிப்பு நிர்வாகிகள், வாடி வதங்கி, தேர்விலே வெற்றி பெருததால் தேம்பியழும் வாலிபர்களுக்குக் கொடுத்தால் என்ன கேடு வந்து விடும்? என்ன குறை வந்து சம்ப வித்து இந்தக் குவலயமே தலைகுப் புறவிழுந்து நாசமாகிவிடும்? கௌர வப்பட்டங்களாம், மரியாதை விருது களாம், இந்தச் சுடுகாடு நோக்கி களுக்கு—எதுக்கு அவர்களுக்கு இவை — அதற்காகவே உயிரைப் பணயம்வைத்து விளக்கடிகளில் விழி யைப் பிரித்து, சிந்தனையை விரித்து, ஏடுகளைப் புரட்டி, தேர்வு, தேர்வு என்று பயந்து கிடக்கும் பிள்ளை களுக்கு, அதுவும் அதில் தோல்வி யடைந்து மனமுடைந்து கிடக்கும் மாணவர்களுக்கு, ஆளுக்கொன்று அள்ளிக் கொடுத்தால் யார் வீட்டுச் சொத்து கொள்ளை போய்விடும்?" என்றான் நாயகம், கல்லூரியில் பி. ஏ, எம். ஏ. என்று பட்டம் எடுக்காவிட்டாலும், ஜவுளி முகமது என்று விருதுபெற்ற பழைய மாண வன்!

அந்தத் தெருக்கோடியிலிருக்கும் தினகரன், அன்றைய செய்தித் தாளில் தேவை விளம்பரத்தைப் பார்த்து விட்டு, வாங்கிவைத்திருக் கும் கட்டுக் காகிதத்தில், அன்றைக் கொரு ஆறு ஏழு தாள்களை அங்கே ஒன்று, இங்கே ஒன்று என்று அனுப்பிவிட்டு, நாளை வரும் விடை, நாளை மறுநாள் வரும வேலைக்கு உத்திரவு என்று எண்ணித் திருப்தி யடையலாம் என்று வந்தவன் திகைத்துப் போனான். அவன் படித் துப் பட்டம் பெற்றவன். ஆனால் வேலையில்லாமல் 'வெடுவெட்டி'யாகச் சுற்றி வருபவன்!

"என்னடா இப்படிக் கூவுகிறாய்? எனக்கொன்னும் புரியவில்லையே!" என்றான்.

"பாரடா, இந்தப் பத்துநாள் பேபரையும்! பிறகு சொல்வாய்" என்று கூறிக்கொண்டே வீசியெறிந் தான் ஆறு, ஏழு நாட்களில் வந்த செய்தி மடல்களை! அவன் அங் கங்கே பச்சை மையினால் குறிப்பிட்ட செய்திகளைப் படித்தான். திடுக் கிட்டான்.

பம்பாய் நகரமெங்கும் பெரியதொரு பரபரப்பு பரவி யிருந்தது சென்ற வாரம்— சென்ற ஆண்டு நடந்த தற் கொலைகளினாலும், இவ்வாண்டு டெல்லி, போன்ற இடங்களிலி ருந்து வந்த தகவல்களினாலும் பம்பாய் அதிகாரிகள் தடுப்பு வேலைகளில் ஈடுபட்டனராம்.

தோல்வியுற்ற மாணவர்கள் பல இடங்களில் தற்கொலை புரிந்து கொள்ளத் திட்டமிட் டிருப்பதாகப் போலீஸ் அதி காரிகளுக்குச் செய்தி கிடைத் தது.

குளம குட்டைகளுக்குக் காவல்—ஆறுகளிலும் பாது காவல! கடலில் விழுந்து மடி வார்களோ என்ற அச்சத்தில் அங்கேயும் ஆள்கள் நிறுத்தி வைக்கப்பட்டனர்.

சிலர் கோபுரத்தின் உச்சி யிலிருந்து மடிவர் எனவும் வதந்தியுலவியதால் எல்லாக் கோபுரங்களிலும் கதவுகள் மூடப்பட்டு விட்டன.

கூட்டம் கூட்டமாக மாண வர்கள் தற்கொலை வேலையில் ஈடுபடுவர் என்றறிந்து கூட்ட மாக மாணவர்கள் செல்லும் பக்கமெல்லாம் கண்ணோட்டம் செலுத்தப்பெற்றது.

X X X

அய்யனாவரம் குன்னூர் ஹைரோடிலிருந்த ரகுநாதன் என்ற 19-வயது சிறுவனின் 'பிரேதம்' இன்று காலை இங் குள்ள எம். எஸ். எம். தண் ணீர் தொட்டியிலிருந்து எடுக் கப் பட்டது, ஐந்தாவதுபார பரீட்சையில் தவறியதால் தற் கொலை செய்துகொண்டதாக நம்பப்படுகிறது.

X X X

மஹாவீர் ஜெயின் வித்யால யத்து ரெசிடென்ட் மெடிகல் ஆபீசரான 30-வயதுள்ள டாக்டர் கே. ஜே. மேத்தா எம். எஸ். பரீட்சையில் தேர்ச்சி யடையாததால் பொட்டாசியம் சைனேடை உட்கொண்டு மாண்டார்.

X X X

பெரும்பாக்கம் தீனதயாளு, தன் எண் பத்திரிக்கையில் வாராததால் கிணற்றில் விழுந்து மாண்டான்.

X X X

எகிப்து நாட்டு மாணவர்கள் இன்று பெரியதொரு போரே தொடங்கி நடத்திவிட்டார்கள். தேர்விற்கென கடினமாக வினாத்தாள்கள் குறித்த பேரா சிரியர்களைத் தாக்கினர். அடித் தனர். உதைத்தனர். அடுத்த முறையும் இப்படிச் செய் யாதே என்று சொல்லிப் புடைத்தனர்.

X X X

இப்படிக் குறித்துக் காட்டப் பெற்றவைகளை அவன் படித்தவுடன் அவன்முகம் வாடிவிட்டது. பிணக் களை வழிந்தது!

"இந்தத் தேர்வுமுறையில் ஏதோ ஒரு கோளாறு இருக்கிறது. அதனை என்னவென்று கண்டுபிடித்துவிட் டால் இந்த சோகக் கதைகளை செவி யும், சிந்தனையும் கேட்டு வேதனை யடையவேண்டியதில்லை" என்றான்

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 18—6—50 [காஞ்சி

சூதுப் பாதை

✻

மதுரையில் கடந்த ஞாயிறன்று திராவிட கழகச சார்பில் பெரியார் பேசவிருந்த பொதுக்கூட்டத்துக்கு தடையுத்திரவு போடப்பட்ட செய்தியைக் காண்போருக்கு சீற்றம் உருவாகாது, சிரிப்பே உண்டாகும்!

திராவிடக் கழகத்துக்கும்—திராவிட முன்னேற்றக் கழகத்துக்குமிடையே தகராறு ஏற்படுமென்று தோன்றுவதால், அவர் பேசவிருந்த பொதுக்கூட்டம் தடை செய்யப்பட்டதாம்-144 பிறப்பிக்கப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமெனக் காட்டப்பட்டிருக்கிறது.

பேச்சுரிமை பேசி ஆட்சிப்பீடம் ஏறிய 'சுயராஜ்ய' வீரர்களா இத்தகைய சூதுப் பாதை செல்வது?—சேச்சே! மானக்கேடல்லவா என்று நாடு கேட்கும், நல்லோர் நினைக்கத்தான் செய்வர்.

எதிர்க்கட்சிகள் என்றாலே இன்றைய ஆளவந்தார்—எடு பணத்தை, தொடு துப்பாக்கியை, போடு தடையுத்திரவை என்று நடந்துகொள்கிறார்களேயொழிய 'என்ன சொல்லுகிறார்கள் அவர்கள்' என்ற எண்ணம் எழும்புவது கிடையாது.

பொய்க் காரணம், போலிக் குற்றச்சாட்டு எதையாவது கூறி, எப்படியாவது எதிர்க்கட்சிகளின் நடமாட்டமில்லாமல் செய்துவிடுவோம் என்றே கருதுகிறார்கள்.

பத்திரிகைகளுக்கு ஜாமீன், நூல்களுக்குத் தடை, அதை எழுதியோர், பிரசுரித்தோர் அச்சிட்டோர் மீது வழக்கு, அநாவசியமாக அவர்களை அங்குமிங்கும் இழுக்கடிப்பது—என்ற அநாகரீகப் பாதையிலேயே நடந்து செல்கின்றனர்.

'திருடுகிறான் பார்' என்று திருடனைப் பார்த்துச் சொன்னால் அவனுக்குச் சீற்றம் உருவாகும். 'போகிறான் பார்' என்று போக்கிரியைச் சுட்டிக் காட்டினால் அவன் பொருமத்தான் செய்வான்—இது சகஜம்! வேசியைப் பார்த்து 'விவஸ்தை கெட்டவள்' என்று சொன்னால், வேகப்படத்தான் செய்வாள், 'சொல்வது நிஜந்தானே—நம்மீது தவறு இருக்கத்தானே செய்கிறது' என்று எண்ணமாட்டாள்.

ஆட்சிப்பீடமேறியோர் இந்த ரகத்தில் எதையும் சேராதவர்கள். நாட்டின் நன்மைகளைக் கண்டு, குற்றம் குறைகள் கூறப்பட்டால் அதை உணர்ந்து, மக்கள் நல்வாழ்வுக்காகப் பாடுபடவேண்டியவர்கள்.

பதட்டமும் படாடோபமுமல்ல அவர்கள் பாதை — விஷயங்களைப் பகுத்தறிந்து, வேதனைகளைக் களைந்து, விவேகத்துடன் நடக்க வேண்டிய பொறுப்பு அவர்களுடையது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக 'சுயராஜ்ய' இந்தியாவில் ஆட்சியாளரின் குறைகளை எடுத்துச் சொல்லி, சக்கரம் சரிவுப்பாதையில் உருளுகிறது இது ஆபத்து என்று எச்சரிப்போர், எரிச்சல் தருபவராகக் காட்சி தருகின்றனர் காங்கிரஸ்-கனங்களுக்கு.

எதிர்க்கட்சி ஒருநாட்டுக்கு இன்றியமையாதது—ஜனநாயகத் தேரின் சக்கரம்! ஆனால், இங்கு அது தடைக்கல் எனக்கருதப்படுகிறது, ஆட்சி தங்களது ஏகபோக உரிமை என்று கருதிக்கிடப்போரால் — காங்கிரஸ் சர்க்காரால்!

நல்லவன்போல நடித்து, நாலு பேர் மெச்சும்படியாய் நடந்துகொண்டு, நடுராத்திரியில் நகர்க்கொள்ளையில் ஈடுபட்டால்—அவனை எவரும் மதிக்கமாட்டார். ஆனால், அவன்பால் இரக்கம் கொண்டோர் 'இப்படி நடக்கலாமா? என்னென்னமோ பேசுகிறாய்—ஆனால் இவ்விதம் நடந்துகொள்கிறாயே, சே! இது மானக்கேடு பாதை தவறாதே—நல்லவழியில் நடந்துசெல்' என்று கூறுவர்—அனுதாபத்தின் விளைவாக.

இன்று ஆட்சிபீடமேறியோர் மக்கள் முன்னிலையில் மகத்தான காரியங்களைச் சாதிக்கப் போகிறோம் என்று மார்தட்டி, வீரம் பேசி வெற்றிகண்டவர்கள் — மகாஜனங்களின் மதிப்பைப் பெற்றவர்கள். ஆனால்இன்று, ஆட்சியிலமர்ந்ததும், மனம்போன போக்கில் நடக்கிறார்கள்—மக்களை மதியாமல். இதன் விளைவாக நாட்டுமக்களிடையே, "காங்கிரசா?—சொல்லாதே, அந்தப் பெயரை, இன்றிருப்பது சுயநலக் கூடாரமல்லவா" என்று கேட்கும் அளவுக்கு வேதனைவிரிந்திருக்கிறது. மக்கள் மன்றத்தில் வளர்ந்திருக்கும் இத்தகைய மனமாற்றத்தை வளர்த்து, மாச்சரியத்தைச் சிருஷ்டித்து, காரியங்களைச் சாதிக்க முயன்றால், வெற்றி வெகு சீக்கிரம் கிடைக்கும்—எந்த எதிர்க்கட்சிக்கும். ஆனால் நாமோ 'வெற்றி' என்பதன் பொருள் "நமது இலட்சியபூமி" என்று எண்ணுவதால்—இத்தகைய மோசமான சூழ்நிலையை வெடிக்கச்செய்யும் வீண்வேலையில் இறங்கவில்லை!

தேர்தலில் ஒரு கை பார்க்கப் போகிறோம்—என்பது நமது இயக்கத்தின் குறிக்கோள் இல்லையாதலால், ஆளவந்தாரின் அன்றன்றாட அக்கிரமங்களைப் பெரிதாக்கி, மக்கள் இதயங்களை எரிமலையாக்கி, வெடிக்கச் செய்து 'வோட்டு'ப் பெறவேண்டிய அவசியத்தில் இல்லாமலிருக்கிறோம். ஆகவேதான், நமது கோரிக்கையான 'இன்பத்திராவிடம்' அடைவதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டு அமைதியான முறையில அதற்கான ஆதரவைப பிரசசார மூலம் திரட்டிக்கொண்டு வருகிறோம். காங்கிரசை எதிர்த்துத் தோற்கடிக்கவேண்டும், சட்டசபைகளிலே உட்காரவேண்டும் என்ற சபலம் நமக்கு இல்லாததாலேயே—நன்மைகள் செய்யும்போது சர்க்காரைப் பாராட்டுகிறோம். கேடுகளைச் சிருஷ்டிக்கும்போது எச்சரிக்கிறோம்!

எனினும் 'இவர்களுக்கு' நம்மைக் கண்டால் கசக்கிறது—சிறிடும் சில்லரைகளாகின்றனர்!

"நமது பணி — ஆட்சி என்கிற ரதம் பாதை மாறும்போது அதை எடுத்துச் சொல்லி, மக்களுக்கு நன்மை பயக்கும் நற்பாதையில் இட்டுச் செல்வதுதான்" என்று பல முறை எடுத்துச் சொல்லி வருகிறோம்.

இருந்தும், ஆட்சியாளர் நம்மைக் கண்டால் நடுங்குகின்றனர்—நமது நூல்களுக்குத் தடை போடுகின்றனர், வேண்டுமென்றே வீணாக நம் மீது சந்தேகப் பார்வை செலுத்துகின்றனர். ஆளவந்தாரின் குற்றங்குறைகளை எடுத்துச் சொன்னால் 'என்ன துணிவு இவர்களுக்கு' என்று எண்ணிவிடுகின்றனர்—ப

பரீட்சை பார்ப்பது போல அடக்கு முறை அஸ்திரங்களை ஏவி விடுகின்றனர்.

இப்போது பெரியார் கூட்டத்துக்குத் தடைபோடவேண்டும் என்கிற அற்ப ஆசைக்கு அடிமையாகி விட்ட ஆளவந்தார், அதற்குக் காரணமாகக் காட்டுகையில் நமது முன்னேற்றக் கழகத்தின் பெயரையும் இழுத்திருக்கின்றனர் — அநாவசியமாக.

முன்னேற்றக் கழகம், இலட்சிய வீரர்களின் முகாம்! தேர்தல் வேட்டையைத் தூசு என மதிப்பது—சமுதாயத்தின் துடுக்குத்தனத்தையடக்கும் சூறுவளி! தொல்லைகள் மக்களுக்கு சிருஷ்டிக்கப்பட்டால் துள்ளிடும் வேல்! ஆட்சி நடத்துவோர் பாதை தவறியதைச் சுட்டிக் காட்டும் எச்சரிக்கைப் பலகை! எக்கட்சியுடனும் மோதிக்கொள்ள விரும்பாதது! என்று அடிக்கடி சொல்லி வருகிறோம்.

இருந்தும் ஆட்சியாளர் நமது கழகத்தின் பெயரை, அநாவசியமாக இழுத்திருக்கின்றனர்.

தகராறு ஏற்பட்டுவிடுமாம்!—கூறப்பட்டிருக்கிறது, திராவிடக் கழகத் தலைவருக்குப் போடப்பட்ட தடையுத்திரவில்! ஆளுக்கு விழுது - இருமுனைப் பீரங்கிகள் என்று நாம் அடிக்கடி குறிப்பிட்டு வருகிறோம் இரு கழகங்களைப்பற்றிக் கூறும் போதும். முன்னேற்றக் கழகம் முகிழ்த்த நாள்முதல், மக்களுக்குப் பணியாற்றுதலை தனது மாபெரும் பணியெனக் கொண்டதே தவிர, சில்லரைகளுக்காக தனது சிந்தனையைச் சிதறவிடவில்லை. இது அறியாத அளவு கருத்துக் குருடால்லர்-ஆட்சிப்பீடமமர்ந்தோர். இருந்தும், சூதுப் பாதை நடப்போமா என்று எண்ணத் தொடங்கியிருக்கின்றனர். இவர்கள் காந்தியாரின் சீடர்கள் என்று கூறிக்கொள்வதிலே பெருமை கொள்பவர்கள்! காந்தியார்-நேர்மை நீதிக்காக போராடியவர். அவருடைய சிஷ்யகோடிகள் என்று வீரம் பேசும் உங்களுக்கு அழகல்ல இது —அடக்கு முறைப் பாதையில் செல்ல ஆசைகொள்வதும், அதற்காக அமைதியைக் கேடயமாகக் கொண்டு பணியாற்றும் கட்சியின் மீது தூஷணை கிளப்புவதும் கூடாது, தூண்டிவிடுவதும்-தூபம் போட்டு சிண்டு முடிவதும்-இரண்டு ஆடுகளை மோதவிட்டு அதிலிருந்து வழியும் இரத்தத்தை நக்கிக் குடிக்கத்தாமே ஒரு குள்ளநரி-அதுபோன்ற செயலாகும்!

குள்ளநரிகளாகாதீர் — ஏமாற, ஆடுகளுமல்ல, நாங்கள்! வெத்து வேட்டுகளைக் கிளப்பி, வீணாக ஏமாறுதீர்!

✲

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வாரூர் தோழர் டி. வி. நமசிவாயம் தமது இசைக் குழுவினருடன் தமிழிசை தந்து, 'வளமார் எமது திராவிட நாடு' என்று முழக்கி, குழுமியிருந்த மக்களின் இதயங்களைக் கொள்ளைகொண்டார்.

மாநாட்டின் முதல் நாள் இரவு, மதுரை அழகரடி வேலாயுதம் நினைவுப் படிப்பகத்தாரால் 'சிலை' என்ற சீர்திருத்த நாடகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. முன்னேற்றக் கருத்துக்களைத் தாங்கிய அந்நாடகத்தை நடத்திய தோழர்கள் நமது பாராட்டுக்குரியவர்கள். அவர்கள் முயற்சியையும் ஆர்வத்தையும் எவ்வளவு பாராட்டினும் போதாது!

இரண்டாம் நாளிரவு நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி முதலியோர் 'சந்திரமோகன் நாடகமும் நடைபெற்றது.

X X X

வெற்றிக் களிப்பும், வீரமுழக்கமும் இரண்டு நாட்களும் நிறைந்து வழிந்தன — சோழவந்தானில். நமதியக்க முன்னேடும் வீரர்கள் எல்லாம் மாநாட்டில் தங்களது கருத்துரைகளை மக்களுக்குச் சமர்ப்பித்தனர் — ஆளவந்தாரின் அடக்கு முறைப் போக்கு குறித்தும், இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்க்காதுவிட முடியாது என்றும் தோழர்கள் பேசியபோது மக்கள் எழுப்பிய கை தட்டல் மக்கள் மன்றத்தில் ஆளவந்தாரின்மீது ஏற்பட்டுவரும் அதிருப்தி எத்தகையது என்பதை எடுத்துக் காட்டியது. மாநாட்டிற்கென மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து குழுமியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்கும் பாராட்டக்கூடிய வகையில் மாநாட்டினர் செய்து தந்திருந்த சாப்பாட்டு வசதிகள் பாராட்டற்குரியவை.

மதுரை மாநாடு—மாபெரும் வெற்றி, நாள்தோறும் பட்டிதொட்டிகளிலெல்லாம் சுற்றியலைந்து பாடுபடும் நம் கழகத் தொண்டர்களுக்கு. மதுரை மாவட்டத்தில் இன்று ஏற்பட்டுள்ள இந்தப் புது எழுச்சியும், விழிப்பும் நம் தொண்டர்களின் சேவையின் விளைவுகள்தான்.

இந்தப் புதுநிலை, வேகமாக வளர வேண்டும், சண்டமாருத வேகத்தில் இன்னும் அதிகமாக நமது பணி நடைபெற வேண்டும், நாடெங்கும் மேலும் அதிகமான கிளைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்ற உணர்ச்சியும் தொண்டும் வளரட்டும்! வளரட்டும்!! என்று வாழ்த்துகிறோம்—மாவட்ட நிர்வாகிகளையும் இயக்க வீரர்களையும் பாராட்டுகிறோம்!!

✲

12-ம் பக்கத் தொடர்ச்சி

னைப்பட்டினம் போரியா"வாக இருந்தால் எப்படி எறிந்து விழுவானே அப்படித்தானே நாம் மாறிவிடுவோம்.

தேர்வுமுறையும் திருத்தப்பட வேண்டும். கல்வித்திட்டமும மாற்றப்படவே ண்டும். இப்படிமாற்றினால் தான் மாணவர்கள் குளங்குட்டைகளைத் தேடமாட்டார்கள், தேர்வு முடிவுகள் தெரிந்தவுடன், குவலயத்தையே ஆளுவோம் என்று குதுகலமாகப் பேசுவர் — கொண்டாட்டம் போடுவர்!

✲

திருமணம்

7—6—50-ல் செட்டேரியில் பால சுப்ரமணியம்—சரசுவதி திருமணம் ஏ. கே. தங்கவேலர் தலைமையில் நடந்தது. தோழர்கள் பத்மநாபன், சி. வி. எம். அண்ணாமலை, கண்ணப்பர், இராசமாணிக்கம், மற்றும் பலர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர்.

பயங்கரப் பரீட்சை!

7-ம் பக்கத் தொடர்ச்சி

'அப்ளிகேஷன்' போட்டு அலுத்துப் போன தினகரன்.

“தேர்வுமுறை மட்டுமென்ன தினகர், இந்த நாட்டுக் கல்வி முறையிலேயே குறையிருக்கிறது—நிறைய, பெருத்த அளவில்!” என்றான் பள்ளிப்படையெடுப்பிலே முழுமூச்சாக ஈடுபட்டு அலுத்த நாயகம்.

இருவரும் பிரிந்தனர். ஆனால் அவர்கள் உரையாடலில் வந்த குறைமட்டும் புரியவே இல்லை!

X X X

பத்து தினங்களாக, பக்கம் பக்கமாக பரிட்சை முடிவுகளைத் தாங்கி ஏடுகள் வருகின்றன. கட்டிளங் காளைகள் கண்களிலே ஆர்வம்வழிய வழிய, அவசரம் அவர்களின் விரல்களில்பாய்ந்தோட பரபரக்கத்தங்கள் எண்களைத் தேடுகின்றனர். தங்கள் வெற்றியை அந்தப் பொல்லாத எண் சொல்லிவிட்டால் தலைகால் தெரியாமல் துள்ளிக் குதித்துக் கூத்தாடுவர். தோல்வியைச் சுமந்துவர வெட்கப்பட்டுக்கொண்டு ஏடுகளில் அவர்களின் எண்கள் இல்லாவிட்டால், கூம்பிய தாமரையாகிவிடும், அவர்கள் முகங்கள்! தேம்பி வீங்கிவிடும், அவர்கள் கண்கள்! நடையில் மிடுக்கிருக்காது. நல்ல உணவில்நாட்டம் செல்லாது. ஆட்டம் பாட்டங்களில் அவர்கள் உள்ளம் செல்லாது நடைப்பிணம்போல உலவுவர். தோல்வியைத் தாங்கிடும் அளவு உரமேறாத தளிர் உள்ளங்களை தாங்கியவர்கள்! ஆகவேதான் அவர்கள் இதயங்கள் ஊதிய பலூனுகின்றன. அவர்கள் தோல்வியை எதிரெதிராக நின்று வரவேற்கத் துணிவின்றி துவண்டுவிடுகின்றனர். சிலர் பொய்யைத் துணைக்குத் தேடுகின்றனர். கொஞ்சமும் இறுகாத இதயம் படைத்த பிஞ்சு நெஞ்சங்கள் உயிரை மாய்க்கவும் அஞ்சாமல் ஆறு, குளம், குட்டைகளைத் தேடும்—பொடாசியம் சைனைடை உட்கொள்ளவும் தயங்காது—ஆம், இந்த உண்மையைச்சொல்கின்றன அந்தத் துயர சம்பவங்கள்!

ஆண்டுகள் பல உருண்டு அனுபவ முத்திரை ஆழப் பதிந்துவிட்டாலும் இந்தத் தோல்வியைத் தாங்கும் தைரியமுள்ள துவளா இதயமுள்ளோர், இருக்கலாம், எண்ணிக்கையில் பலர்—எனினும் இரண்டொருவர் இதற்கு எதிர்மாறாகவும் இருப்பர் என்பதை அறியவேண்டும். ஆய்யனுவரம் ரகுநாதனும், பெரும்பாக்கம் தீனதயாளுவும் சாவைத் தேடிக்கொண்டார்கள். அவர்கள் இளம்பிள்ளைகள்—முப்பது வயதான மேத்தாவும் நச்சுக்கோப்பையைத் தாங்கித் தன் உயிர் குடிக்கவேண்டி நின்றார் என்றால் தோல்வி தாங்காதவர்கள் வயதேறியவர்கள் கூட்டத்திலும் உண்டு என்று உணர்கிறோம்.

இவர்கள் அப்படியென்ன, ஊர் சுற்றி உத்தண்டர்களா, 'காடுபாயும்' கருப்பண்ணன்களோ, படிக்கும் விருப்பம் இல்லாது, ஏதோ எங்க வீட்டுக்காரரும் ஆபீசுக்குப் போகிறார் என்ற கேலிப்பழமொழிபோல ஒப்புக்காகக் கல்லூரிக்குச் சென்று வரும் ஒன்றுமறியாத 'திம்மாக்காங்களா' படிப்பும் அவர்களை வெறுத்து விட்டோடிவிடவில்லை. இரவு பகலென்று பாராமல் படித்துப்படித்து உருக்குலைந்தவர்கள். அலாரம்கெடிகாரத்தினை படுக்கைக்குப் பக்கத்திலே வைத்துக்கொண்டு தூங்குபவர்கள்! அவர்கள் தங்களுக்குரிய பாடங்களை ஒருமுறை இருமுறை பலதடவைகள் கொஞ்சமும் சலிப்பின்றி, வெறுப்பின்றி மீண்டும்,மீண்டும் 'டெவில்' அடித்திருப்பார்கள். சிலபகுதிகளை அப்படியே 'மக் அப்' பண்ணியிருப்பார்கள்! இருந்தும் தோல்வியைத் தழுவுகிறார்கள் — ஏன்? படிக்கிறார்கள், தேர்விலே தலைகுப்புற விழுகிறார்கள்—ஐயோ,புரியவில்லையே, இந்தச்சிக்கல்! அவர்கள் முட்டாள்களில்லை. நல்லகலகலவென ஓடிடும் சிற்றாறுபோல கருத்தோடி வரும் சிந்தையுள்ளம் கொண்டவர்கள். இருந்தும் பரிட்சையில் 'பல்டி' யடிக்கிறார்கள், காரணம் தேடுகிறார்கள்!

ஆகவே குற்றம் வேறொரு இடத்திலே இருக்கிறது. பழியோரிடம், பாவமோரிடம்.........என்பார்களே அப்படியல்லவா கதை இருக்கிறது! மாணவர்கள்மீது குறை சொல்ல முடியவில்லை. பெரும்பாலும், வெகு பாடுபட்டு படிக்கிறார்கள்—படியாதவர்கள் இல்லையென்று சொல்லவில்லை. அவர்களைத் தள்ளிவிட்டு பேசுவோம் அவர்கள் தொகையில குறைவு, குறிப்பில் நிறுத்திப் பேசக் கூடிய அளவுகூட இல்லாதஓரிருவர்! — ஆனால் தோல்வியடைகிறார்கள். ஏன்? தேர்வுமுறையிலேயே பயங்கரத் தவறு மறைந்திருக்கிறது.

கிட்டப்பா, தினமும் சைக்கிளில் போகிறான். போகும் வழியிலே அடிக்கடி காற்று இறங்கிவிடுகிறது. 'பன்ஞ்சராக' இருக்குமோஎன்று பல முறைகள் சோதித்துப் பார்த்தான்—அப்படியொன்றுமிருப்பதாகத் தெரியவில்லை. பிறகு 'வால்ட்யூபை' எடுத்துப் பார்த்தான், அதிலேயும் குறையில்லை கிட்டப்பாவுக்கு சூட்சமம் புரியவில்லை. கடைசியில் கண்டுபிடித்தான், பல நாள் உபயோகித்ததால் அந்த ட்யூபே வலிவிழந்து, அங்கங்கே உப்பியும் ஊதியும்தானே காற்றை பிழந்துவிடுகிறது என்று! அதுவரையிலும் சைக்கிளை அடிக்கடி எடுத்துவிடும் தம்பி தருமலிங்கத்தைத் திட்டுவான். இரவல் வாங்கிச் சென்ற ஏகாம்பரத்தின்மீது எரிந்துவிழுவான். கடைசியில் விபரம் புரிந்ததும் புதிய 'ட்யூப்' போட்டுவிட்டான்!

இப்படித்தான், விபரம் கிடைத்தால் மாணவர்கள்மீது குற்றப் பத்திரம் படிப்பதை முழுவதும் நிறுத்திவிடாவிட்டாலும், குறைத்துக்கொண்டு, தேர்வு முறை—அதை நடத்துவிக்கும் வகை—இவைகளில் பார்வையைப் பாய்ச்சத் தோன்றும்! அப்படிப் பரீட்சைகள் மீதே, பரீட்சை நடத்தினால் தெரியும் உண்மை! தெளிவடைவோம் நாம்.

இப்பொழுது நடைபெறும் தேர்வுகள் அத்தனையும் மாணவனின் திறமைக்கு எடைபோடும் முயற்சியிலே ஈடுபடவில்லை. அவனது நினைவு வலிமை, ஞாபக சக்தியின் தன்மையை அளந்து பார்க்கத் துடிக்கின்றன! அவர்களுக்கு வைத்துள்ள புத்தகங்களில் இண்டு இடுக்குகளில் சந்து பொந்துகளில் புகுந்து மறைந்திருக்கும் இரண்டொரு கருத்துக்களை இழுத்து வந்து நிறுத்த முடிகிறதா, மறக்காமல், மாற்றாமல், புகுத்தாமல், குறைக்காமல், கூட்டாமல் என்று பார்க்க முனைகிறார்கள் தேர்வாசிரியர்கள். அவர்களின் சுயசிந்தனைக்கு சந்தர்ப்பம் தருவதில்லை. அசோகன் ஆண்ட வருடமும், அலக்சாந்தர் படையெடுத்துவந்த பாதையும், குப்தர் ராஜ்ய பரப்பும், ஹர்ஷரின் துன்பங்கள் ஆட்சிக்கு வருவதற்கு

முன்னும், பின்னும்........என்று கேட்டார்கள். ஆனால் விடுபட்ட தமிழக வரலாற்றை ஒரு பகுதியை யாவது அவனைத் தேடிப் பிடித்துத் தன் சொந்த அனுபவ உண்மைகளைத் தந்து மகிழும்படித் தேர்வுகளிருப்பதில்லை. ஆசிரியர்கள் அவர்கள் மண்டையிலே திணித்து வைத்துள்ள பண்டங்களை, கேட்டவுடன் அவர்களின் மடிகளிலேயே வாந்தியெடுத்து விடுவர். இன்றைய தேர்வுகள் அறிவை அலட்சியம் செய்துவிட்டு, மறவாத் தன்மையைப் பெரிதாக்கி வேடிக்கை செய்கிறது! ஆகவேதான் ரோஜா தோற்றுவிடுகிறது, வாடாமல்லி வெற்றி பெறுகிறது—மலர் அழகுப் போட்டியில்!

தவறி விடுகின்ற மாணவர்கள் அறிவில் குறைந்தவர்களல்லர், படிப்பில் பின்வாங்கிடுவருமல்ல! ஆனால ஞாபகம் அதிகமில்லாதவர்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம்! இந்த அடிப்படையிலே பார்த்தால் வெற்றி பெறுபவர்களுக்குச் சில அதிக சலுகைகளும் இருக்கின்றன. பரம்பரைப் பழக்கமும், வழி வழி வரும் வழக்கமும் சிலருக்கு இந்த நினைவுணர்ச்சியை அதிகப்படுத்துகின்றன. வேதமோதிகள், வேள்விப் புகை விரும்பிகள் அந்த நாளிலிருந்து, எழுதாத பாடல்களை, செவி வழியே காத்துவந்த சுருதியை, கர்ணபரம்பரையாக விடாது பரப்பிவந்த வேதத்தை, பிறர் கண்களுக்குப் படாது மறைத்துவைத்த மறையை ஓதி ஓதி நினைவுத் திறத்திலே முன்னணியில் நின்றார்கள். அவர்கள் வழி வந்தோருக்கு இன்றைய தேர்வு முறை தெவிட்டாத தேனாக, ஆயுளை நீட்டும் அந்த 'தெய்வலோக அமுதாக' இருக்கிறது. ஆனால் அப்பப்பொழுது சிந்தனையிலே தோன்றிடும் அருமையான கருத்துகளை காவியமாக, ஓவியமாக, சித்திரமாக, சிற்பமாக, பாடலாக, நாடகமாகத் தீட்டியவரின் வழிவந்தோர், இந்த 'வாந்தியெடுப்பிலே' தோற்றுவிடுகிறார்கள்! ஆகவேதான் தேர்வு முறையிலே குறையிருக்கிறது என்கிறோம். அந்தக் குறையைப் போக்க வழிவேண்டும் என்று சொல்லி வருகிறோம்.

* * *

பரீட்சை மண்டபங்களில் சிலர் மயங்கி விழுவதையும், மனம் மாறி ஓடுவதையும் கேட்டிருக்கிறோம்—கண்டுமிருக்கிறோம். ஏன்?

தேர்விலேமட்டும் குற்றம் என்று சொல்லி, அத்தோடு முற்றுப்புள்ளியிடமுடியாது. கல்வி முறையிலேயே களங்கமிருக்கிறது. பாட திட்டங்களிலேயே பழியுள்ள வழியைப் பின்பற்றி யிருக்கிறார்கள், இந்த நாட்டுப் படிப்பின் 'வேந்தர்களும்' அவர்களின் எடுபிடிகளும்!

கண்டதைப் பாடமாக்கிவிடுவார்கள்—கேள்வி முறை கிடையாது! கணக்கில்லாத அளவு மாணவர்களின் முதுகுகளின்மீது சுமையை ஏற்றிவிடுவார்கள்—அதனைக் கேட்க நாதியில்லை!

திட்டவட்டமான ஒரு கல்விமுறை தெளிவுள்ளோரால் கொண்டுவந்து, அது நடைமுறைத் திட்டமாக்கப் படாதவரை, நல்ல நிலை ஏற்படாது இந்த 'நாமகள்' உலகிலே! அந்த நிலை வரவேண்டுமானால், அறிஞர்களுக்கு—அனுபவக் களஞ்சியங்களுக்கு வாய்ப்பும், வசதிகளும், அவர்களின் வார்த்தைகளுக்கு மதிப்பும் மரியாதையும் தரவேண்டும்.

கல்வித் திட்ட முறையில சர்க்கார் அபுக்கீஷ தலையிடுவது தகாது. ஆளுங் கட்சி மாறுவதுபோலவே, கல்வி முறையும் மாறிக்கொண்டிருந்தால் கல்வியின் கட்டுக்கோப்பு குலையும்—திட்டம் கலகலத்துப்போகும். ஆகவே, இந்தக் கல்வித் திட்டத்தை தனிப்பட்ட அறிஞர் குழுவின் கையில் விட்டுவிடவேண்டும். இல்லாவிட்டால், திட்டம் உருப்படாது. இந்தக் கருத்துப்பட, ஒருமுறை, சென்னைப் பலகலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் இலட்சுமணசாமி பேசியிருக்கிறார்.

ஆம், மூன்று மொழிகளை பாலர்களின்மீது சுமத்தப் பாடுபடும் மலையாளத்தாரும், தக்ளியும் இராட்டையும் கொடுத்து, ஆடுராட்டே பாடச் சொல்லும் காலத்தை மறந்த கட்சியின் 'மிச்ச சொச்சங்களும்' கல்வித் திட்டத்தில் தலையிட்டால் என்ன செய்வது? ஆயிரங் காலத்துப் பயிர் ஆயிற்றே அது! அவரவர் மனம்போன போக்கில் ஆட்டிவைத்தால் உருப்படுமா?

பாட திட்டத்தை ஒழுங்குபடுத்தாமல், பரீட்சையில் தவறும் பையன்கள்மீது வசைமாரி பொழிவதிலே அர்த்தமில்லை. படித்தும் தவறும் பரிதாப நிலையை மாற்றவேண்டுமானால், பாட திட்டத்திலேயே 'கை வைக்க' வேண்டியவர்களாகிறோம்.

இந்த நிலை நீடிக்குமானால், நிலைமை விபரீதமாகும். மாணவர்கள் எகிப்து தேசத்து முறையைக் கையாள ஆரம்பித்துவிடுவர். பரிதாபத்திற்குரிய ஆசிரியர்கள் அடி உதையும் தின்று அல்லல்படுவர். தொழிலாளர்களின் ஆயுதமான வேலை நிறுத்தத்தைத் தட்டிப் பறித்துக்கொள்வர், மாணவர்கள்.

போரடிக்கும் வாத்திமார்கள்
பேரடித்தபோதிலும்
அச்சமில்லை, அச்சமில்லை,
அச்சமென்பதில்லையே!

என்று வீர விருத்தமிசைத்துப் பூட்டை யுடைத்துக்கொண்டு புலியென வெளியில் கிளம்பினும் கிளம்புவர்.

* * *

படிக்கவேண்டும் என்ற ஆர்வம் வளர்ந்து வருகிறது, அறிவுத்தாகம் எடுக்க ஆரம்பித்துவிட்டது. படித்தவர்களின் எண்ணிக்கை வர வர பெருகிக்கொண்டே இருக்கிறது! நல்ல சூழ்நிலை — இந்நிலை, எதிர்காலத்தினை எடுத்துச் சொல்லும், பொழுது புலர்ந்தது, போயின இருட்கணம் யாவும், புதுமலர்ச்சி, புள்ளினங்கள் ஒலித்தன என்று பூபாளம் பாடும் பொன்னான காலம்!

மாகாணத்திற்கு மாகாணம் அறுபத்தாறாயிரம், எழுபத்து எட்டாயிரம், எண்பதாயிரம் என்று போட்டியிட்டுக்கொண்டு, இந்த ஆண்டு எஸ். எஸ். எல். ஸி. தேர்விற்கு அனுப்பியிருக்கின்றன. ஆனால், 'பன்னாடை' வேலையிலும் பயப்படாமல் காரியமாற்றி யிருக்கின்றன!

கல்லூரிகளிலும் அப்படியே! — பள்ளி வாழ்வை மூடி வைத்துவிட்டு இந்தப் பல்கலைக் கழக வாழ்வைப் பார்த்தால் புதியதோர் விளக்கம் கிடைக்கும்.

விஞ்ஞானப் பகுதியில் சேர விரும்புபவனுக்கு வரலாறு தருவர், கணித ஆர்வம் உள்ளவனுக்கு விஞ்ஞானம் தருவர். பிறகு அவனுக்குத் தேர்வு நடத்துவர். அவன் மார்ச், செப்டம்பர், மார்ச் என்று மீண்டும் படையெடுக்கும்படி நிலைமையைப் பாழாக்குவர்

இடம் கேட்டால் இல்லை—படிப்ப

வர்கள் அதிகம்!—இருக்கும் கல்லூரிகள் மிகக் குறைவு. இதைப் போக்க ஆளவந்தவர்கள் அக்கரை காட்டுவதில்லை! தனிப்பட்டவர்கள் வைக்க நினைத்தாலும் ஒத்துழைப்பதில்லை.

அதற்கேற்ற அளவில் அறிவாலயங்கள் அமையவில்லை. பாட திட்டமும் போடவில்லை. இந்தக் குறையைப் போக்க ஆளவந்தாருக்குத் தெரியவில்லை.தெரியாதது மட்டுமல்ல தெளிவுள்ளோர் சொன்னால் ஏற்றுக் கொள்வதில்லை. "வாடர் கோஞ்சம் லாவோ" என்ற திட்டத்தைப் புகுத்துவதிலேயேதான் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

✲

இந்த நாட்டில் படித்தவர்களிடையே அரசியல் அலுவல்களில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணம் பரவியுள்ள அளவு உலகில் வேறு எந்த நாட்டிலும் இருக்குமா என்று சந்தேகிக்கிறேன்.

நேரு சொல்கிறார் இப்படி, தமது திருவிதாங்கூர் சொற்பொழிவில்!

பல்கலைக் கழகத் தேர்வுகள் அரசியல் பணிகளுக்குச் செல்லும் நுழைவுச் சீட்டுகளாக மாற்றப்படக்கூடாது!

பல்கலைக் கழக கமிஷனின் அபிப்ராயம் இது!

நேருமட்டுமல்ல, இந்த நாட்டு நிபுணர்கள் யாவருமே இப்படித்தான் பேசுகிறார்கள்.

பசியின் படியைத் தாண்டி, பரிதவிப்பின் எல்லையைக் கடந்து, உல்லாசிகளின் உலகில் காலடியெடுத்து வைத்துவிட்டவர்களுக்கு வேண்டுமானால் இனிக்கலாம், இந்தக் கருத்துக்கள்.

சொத்தை விற்று, பேட்டிருக்கும் தங்கத்தைத் தவிட்டுக்கு மாற்றி படித்துவரும் ஒரு மாணவன் கலை ஆராய்ச்சியிலே ஈடுபடமுடியுமா? அதுதான் தொலையட்டும். அதற்கான வழியாவது இந்தப் படிப்பு முறையிலிருக்கிறதா?

வெட்டிப்படிப்பு, வெறும் வேலைக்குப் படிப்பு கூடாது! நல்ல இன்ஜினியராக, திறமையுள்ள டாக்டராக வேண்டுமானால் முடிகிறதா? இல்லையே!

ஒரு பள்ளி மாணவன் உள்ளத்தைப் புரிந்துகொண்டு, இசையில் நாட்டமிருந்தால் இசைவாணனாக, சித்திரத்தில் சிந்தனை செல்லுமானால் சித்திரக்காரனாக, நாட்டியத்தில் ஈடுபாடு இருந்தால் நடனக்காரனாக, விஞ்ஞானக் கண்டுபிடிப்பில் வியக்கும் அறிவு ஒளிவிட்டால விஞ்ஞானியாக, போரில் ஆர்வமிருந்தால் போர்வீரனாக, விமானப் பயிற்சியில் விருப்பமிருந்தால் விமானியாக...... இப்படிப் போக என்ன ஏற்பாடிருக்கிறது?

அறிவிற்காகப் படிக்கவேண்டும் என்கிறார்கள் — அலங்கார வாழ்வினர்! அவர்கள் அதைத்தான் சொல்லவேண்டும். அன்றாடம் பசிப்போர் நடத்தும் நடுத்தர வகுப்பு நாராயணன் என்ன செய்வான்! எதையாவது படித்து ஒரு பட்டமிருந்தால் 'நாலுகாசு' சம்பாதித்து, வயதான பெற்றோரை வாழ்விக்கலாமே என்று எண்ணுகிறான்.

நேரு சொல்கிறார், சர்க்கார் வேலைக்காக படிப்பில்லை. அறிவு வளர்ச்சிக்காகப் படிக்கவேண்டும் என்று' அவர் நாட்டின் பிரதமர் அதற்கேற்ற கல்வி முறை அமைக்க முடியும்! அறிவு வளர்ச்சிக்கு கல்வியென்று சொல்லிவிட்டு தேர்வு நடத்துகிறார்கள் — அறிவிற்கும் அதற்கும் துளியாவது சம்மந்தம் உண்டா என்ற எண்ணமின்றி!

நேரு பேசுகிறார் – செய்யவில்லை. இதோ வியட்னாமில் ஹோசிமின் செய்து காட்டியிருக்கிறார். புதிதாக ஆறு உத்தரவுகள் பிரகடனப் படுத்தினர். அதில் ஒன்று கல்வித் திட்டத்தைப் பற்றியது!

பள்ளிக்கூட படிப்பு 11-வருடகாலத்திலிருந்து 9-வருடமாகக் குறைக்கப் பட்டுள்ளது. பள்ளிக்கூட வகுப்புகளில வியட்னாம் பாஷைகளில எல்லா பாடங்களும் போதிக்கப்படும். இந்த வருடகால பள்ளிக்கூடப் படிப்பில பள்ளிக்கூடத்தை விட்டு விலகுவதற்கு முன் ஒரே ஒரு பரீட்சை மட்டும்தான் மாணவர்கள் எழுதவேண்டும்.

வருடா வருடம் மாணவர்கள் வகுப்புகளில் செய்த வேலையைக்கொண்டு அடுத்த வகுப்புகளுக்கு அனுப்பப்படும்.

அறிவிற்காகப் படியுங்கள் என்று சொல்லிக்கொண்டில்லை. அர்த்தமற்ற தேர்வுகளுக்குச் சீட்டு கிழித்து விட்டார் ஹோசிமின், இங்கு அலங்காரமாகப் பேசுகிறார் நேரு—ஆனால் அதே முறை கையாளப்படுகிறது, கொஞ்சமும் மாற்றமல!

✲

சென்ற சில திங்களுக்கு முன்னால் டாக்டர் இராதாகிருட்டிணன் பல்கலைக் கழக கமிஷன் தலைவர் என்ற முறையில் வெளியில் வெளியிட்ட அறிக்கையில கூட தேர்விற்கு வக்காலத்து வாங்கவில்லை. அது பழியுள்ள பாதையென்றே கூறியுள்ளார்.

Down, Down,
the Devilish examination!
Long live Radhakrishnan!
'varsity Commission!
Their 'preamble' lines of
their journey-song now
Let us pray for their
success anyhow.

என்று தேர்விற்கு எதிர்ப்புக் கீதம் பாடினர், தோல்வியைத் தழுவிய மாணவத் தோழர்கள்.

"பெண்ணைக் கட்டிவந்தீங்களே காதுதான் செவிடு — கண்ணாவது காக்காய் கண்ணில்லாமலிருக்கக்கூடாதா?" என்று சீறிவிழுந்தாலும், வீட்டுக்கு அடங்கி ஒரு 'விடியா மூஞ்சியை' வாழ்க்கைத்துணைவியாக ஏற்ற, பெற்றோருக்கு அடங்கிய 'நல்லபிள்ளை'! அதுபோல தேர்வு முறைதான் இப்படி என்றால் அதை நடத்துகின்ற இலட்சணம் கேலிக்குரியது! அடிக்கடி பேபர்கள் 'அவுட்!'

சூரத் ஜூன் 2 இவ்வருட எஸ். எஸ். எல். ஸி. தேர்வு எழுதிய வாமன் தின்ஷா ஆவாரி என்ற சிறுவன் வெற்றி பெற்றான். ஆனால் சென்ற ஆண்டே அவன் அசல் வெற்றிபெற்றும் இதுவரை அறிவிக்காமல், இப்பொழுது தேர்வு எழுதி அதன் முடிவு தெரிந்த பிறகு தெரிவித்திருக்கிறார்கள். ஓர் தேர்வு — இரண்டுமுறை எழுதினான்! இரண்டு தடவைகளிலும் வெற்றி எஸ். எஸ். எல். ஸி. போர்டாரின் திறமையே, திறமை! என்னபொறுப்பு, எவ்வளவு துரிதம் நிர்வாகத்தில்!

இப்படி ஒரு செய்தியைப் படித்தால் எப்படியிருக்கும் — செவிடு மட்டுமல்ல, 'வீட்டுக்கு வந்தவள்' "ஒற்றைக்கண் கோரியா, சென்

(9-ம் பக்கம் பார்க்க)

★ மொழி வளர வழி ★

கோவையில் நடைபெற்ற முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் க. வெள்ளைவாரணனார் அவர்கள் தந்த கருத்துரையின், சில பகுதிகள்.

மக்களது அன்றாட வாழ்க்கையினை நிகழ்த்துதற்கு உறுதுணையாய் நின்று, கலைச்செல்வங்களையும் அரசியல் சமூக வாழ்வையும் மேன்மேல் உயர்த்திச் சிறப்பிக்கும் ஆற்றலுடையது, அவரவர்க்குரிய தாய்மொழியே யென்பது உரிமை வாழ்வினை நன்குணர்ந்த நல்லறிஞர் துணிபாகும். உரிமைபெற்றேம் எனப் பாராட்டி மகிழும் நம் நாட்டவர் தம் உரிமையை நிலைபெறச் செய்யும் தாய்மொழியாகிய தமிழுக்குக் குடும்ப வாழ்விலும், அரசியல் வாழ்விலும், சமய வாழ்விலும் முதலிடந் தராது புறக்கணித்து வருவது நல்லறிவுடையோர் நாணுதற்குரிய செயலாகும். தமிழாகிய அறிவுக்கண்ணை யிழந்துவிட்டு வாயளவில் உரிமை பேசி மகிழ்வது 'கண்ணினை விற்றுச் சித்திரம் வாங்கிய' செயலை ஒப்பதாகும். இவ்விழிநிலையை மாற்றி இவ்வுலகியல் வாழ்வில் எல்லாத் துறைகளிலும் தமிழ்மொழிக்கு இடம் தந்தால்தான் தமிழ்மக்களின் வாழ்வு உண்மையான உரிமை வாழ்வாகும்.

இவ்வுலகில் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய பொருள்களின் இயல்பினை மனத்தால் எண்ணியறிதற்கும், எண்ணிய எண்ணங்களை மற்றவர்களுக்குத் தெளிவாகச் சொல்லுதற்கும், சொல்லால் உணர்த்தப்படும் கருத்துக்களைச் செயற்படுத்திக் காட்டுதற்கும் ஏற்ற கருவியாக விளங்குவது நமது தமிழ்மொழியாகும். இதனை இயல், இசை, நாடகம் என மூன்று துறைகளாக வகுத்து நம் முன்னோர் வளர்த்துள்ளார்கள். இவ்வுலகில் அணு முதலாகவுள்ள எல்லாப் பொருள்களின் இயல்பினையும் உள்ளவாறு தெரிந்துகொள்ளுதற்கேற்ற சொல்லமைப்பினையுடையது இயற்றமிழ். சொல்லக் கருதிய கருத்துக்களைக் கேட்போர் விரும்பிக் கேட்கும்படி இன்னோசை மிக இசைத் திறத்தாற் சொல்லும் மொழிநடை இசைத் தமிழ். மனத்திலுள்ள கருத்துக்கள் உடம்பில் தோன்றும் மெய்ப்பாடுகளாலும் தொழில் நிலையாலும் வெளிப்படும்படி விளங்கக் காட்டும் மொழிநடை நாடகத் தமிழ். சுருங்கச் சொல்லுவோமானால், மக்களது மனத்தில் எண்ணங்களை வளர்ப்பது இயற்றமிழென்றும், சொல்லின் இனிமையை மிகுவிப்பது இசைத்தமிழென்றும், செயலின் ஆற்றலைத் தோற்றுவிப்பது நாடகத் தமிழென்றுங் கூறுதல் பொருந்தும். உள்ளத்தால் உய்த்துணர்ந்த கருத்துக்களை உரையினால் பிறர்க்கு அறிவுறுத்தவும், உரையினாற் கேட்டவற்றை உடம்பின் அகக்கருவி புறக்கருவிகளாற் செயற்படுத்திக் காட்டவும் வாய்ப்புடையதோர் கருவியாக முன்னோர் தமிழ் மொழியினைப் போற்றி வளர்த்துள்ளார்கள். உள்ளம் உரை செயல என்னும் முத்திறத்தாலும் மனிதனது வாழ்வு மேம்படத் தக்கபடி தமிழ் மூன்று துறைகளாக வளர்க்கப் பெற்றமையால் அது முத்தமிழ் என வழங்கப் பெறுவதாயிற்று. பண்டை நாளில் மூவேந்தர்களாலும் குறுநில மன்னர்களாலும் குடிமக்களாலும் பேணி வளர்க்கப் பெற்ற தமிழானது இடைக்காலத்தில் நுழைந்த அயலவர் கூட்டுறவால் தன் வளர்ச்சி குன்றிச் சிதைவதாயிற்று. இச்சிதைவினை நீக்கிச் செந்தமிழைச் சிறப்புற வளர்ப்பது தமிழர் அனைவர்க்கும் உரிய பணியாகும்.

தமிழ்க் கல்வியென்றால் இலக்கிய இலக்கணம் என்ற அளவிலே இக்காலத்தார் குறைவாக மதிப்பிடுகின்றார்கள். இவ்வுலகியல் வாழ்வுக்கும் மக்களது மனவளர்ச்சிக்கும் இன்றியமையாத எல்லாக் கலைகளையும் தமிழ்க் கல்வியென்ற பெயராலேயே பண்டைத் தமிழர் வழங்கிவந்தார்கள். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொல்காப்பியனாரால் இயற்றப் பெற்ற தொல்காப்பியம் என்னும் நூல் உலகமக்களது நல்வாழ்வுக்குரிய இலக்கண நூலாக இன்றளவும் நின்று நிலவக் காண்கின்றோம். பிறமொழியாளரெல்லாம் எழுத்தும் சொல்லும் ஆகிய இருவகை வரம்பினையே தம்மொழிகளுக்குரிய இலக்கண வரம்பாக அமைத்துக்கொண்டார்கள். எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும், ஒருவன் பேசும் வாக்கிய அமைப்பினை அறிதற்குத் துணைசெய்வனவல்லது மக்களது வாழ்க்கைத் துறையில் மொழியின் துணைகொண்டு கல்வியறிவொழுக்கங்களாகிய பண்பாடுகளை வளர்த்துக் கொள்ளுதற்கு அவை தமமளவிற் பயன்படாவாம். கல்வியறிவொழுக்கங்களால் மக்களை உயர்திணையுயிர்களாக மேன்மேலும் உயர்த்துவது உலகிற் கல்வியாகிய பொருளிலக்கண ஆராய்ச்சியிற் பண்டைத் தமிழர் மிகவுந் தேர்ச்சி பெற்று விளங்கினார்கள்.

இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் பண்டைத் தமிழாசிரியர்கள் முதற்பொருள், கருப்பொருள் உரிப்பொருள் என மூவகையாகப் பகுத்து ஆராய்ந்தார்கள். நாம் வாழ்தற்கு இடமாகிய மலை, காடு, வயல், கடல் எனப் பேசப்படும் இவ்வுலகமும், மழை பனி வெயில் என்னும் மாற்றங்களைத் தரும் பருவமாகிய காலமும் ஆகிய இரண்டினையும் முதற்பொருள் எனக் கொண்டார்கள். இக்காலத்தில் அணுமுதல் அண்டம் ஈறாகவுள்ள பொருளைக் கண்டு அவற்றின் அகலம் நீளம் நிறை முதலியவைற்றைப் பகுத்து அளந்து கூறுதற்குரிய பூதநூல், வேதிநூல், முதலிய அறிவியல்நூல்களின் ஆராய்ச்சிகள் யாவும் நம் தமிழ் முன்னோர்களால் முதற்பொருள் என்னுந் தலைப்பிலேயே வைத்து ஆராயப் பெற்றன.

புல், மரம், பறவை, விலங்கு மக்கள் முதலாகக் காணப்படும் உயிருடையனவும் உயிரில்லனவும் மக்களின் உணவு, தொழில், முதலியனவும் கருப்பொருள்களாம். நிலமுங்

காலமுமாகிய முதற்பொருளை இடமாகக்கொண்டு, கருக்கொண்டு தோன்றுவனவாதலால் கருப்பொருள் என வழங்கப்பெற்றன. இக்காலத்தில், நிலநூல், தாவரநூல், உடல்நூல், உயிர்நூல், வேளாண்மைநூல் மருத்துவ நூல், முதலாகப்பலவாறு பகுத்து ஆராயும் ஆராய்ச்சிகள் யாவும் பண்டைத் தமிழர் கண்ட கருப்பொருளாராய்ச்சியிலேயே அடங்குவனவாம்.

கணவனும் மனைவியும் காதலால் கருத்தொருமித்து இன்புற்று வாழும் குடும்ப வாழ்வின் ஒழுகலாறுகளை அகமென்றும், பொருளீட்டுதல் அறஞ்செய்தல் ஆகிய சமூக அரசியல் வாழ்க்கையினைப் புறமென்றும், அகம் புறம் என்னும் இவ்விரண்டும் மக்கள் இன்றியமையாது மேற்கொள்ளுதற்குரிய பொருள்களென்றும் இவ்வுலக வாழ்வின் நோக்கத்தையும் பயனையும் தமிழ் முன்னோர் கண்டுணர்ந்து வெளியிட்டுள்ளார்கள். நிலத்திற்கும் நிலத்தைச் சூழவுள்ள கருப்பொருள்களுக்கும் ஏற்றபடி மக்களது உணர்வு வளர்ந்து சிறக்கும் இயல்பினைப் பழந்தமிழாசிரியர் உரிப்பொருளாராய்ச்சி வாயிலாக உய்த்துணர வைத்துள்ளார்கள். இதனால் உளநூற் பயிற்சியில் முன்னோர் நிறைந்த தேர்ச்சியுடைமை இனிது வெளியாதல் காணலாம்!

இவ்வாறு உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் முதல், கரு, உரி என மூவகையாகப் பகுத்து ஆராய்ந்து பழந்தமிழர் கண்ட அறிவியல் நுட்பங்கள் பலவாகும். காணப்படும் இவ்வுலகத்தையும் இதனைச் சூழ்ந்த பெருவெளியாகிய வானத்தின் இயல்பினையும் வான வெளியிலே இயங்கும் சூரியன் சந்திரன் முதலிய ஒளிப் பொருள்களையும் ஆராய்ந்தறியும் ஆராய்ச்சியில் சங்க காலத் தமிழ்மக்கள் ஈடுபட்டு உழைத்துள்ளார்கள். அவர்தம் உழைப்பின் பயனாக வெளிப்பட்ட உண்மைகள் மிகப் பலவாம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் பூதநூலாராய்ச்சிபற்றித் தமிழர்கள் கண்டறிந்து உலகத்தார்க்குணர்த்திய உண்மைகளிற் சில இப்பொழுது கிடைத்துள்ள சங்கச் செய்யுட்களில் ஆங்காங்கே பேசப்படுகின்றன. ஆராய்ச்சிக்குப் போதிய வாய்ப்பில்லாத அந்நாளில், அறிவே அளவு கருவியாகக்கொண்டு தமிழர்கண்ட முடிபுகள் இந்நாளில் நுண்ணிய கருவிகளின் துணைகொண்டு மேனாட்டாசிரியர் கண்டுணர்த்திய முடிபுகளுடன் பெரிதும் ஒத்திருக்கக் காணுகிறோம்.

ஞாயிறாகிய தீப் பிழம்பிலிருந்து தெறித்துவிழுந்தசிறுஉருண்டையே இப்பூமி. இதிலிருந்து தெறித்துப் போன மற்றோர் உருண்டையே சந்திரன். சூரியனிலிருந்து சிதறி விழுந்த பூமியானது, சூரியனது கவர்ச்சியால (ஆகர்ஷண சக்தியால்) இழுக்கப்பட்டுச் சூரியனைச் சுற்றி வருகிறது. அவ்வாறே பூமியிலிருந்து தெறித்து விழுந்த மற்றோர் உருண்டையாகிய சந்திரன் பூமிக்குப் பிறப்பிடமாயுள்ள சூரியனையும் தனக்குப் பிறப்பிடமாகவுள்ள பூமியையும் ஒருங்கே சுற்றி வருகிறது. ஆகாயத்தில் மேன் மேல் உயர்ந்து சென்று பார்க்குங்கால் அங்குக் காற்றின் வேகம் குறைந்துளது. குறிப்பிட்ட தூரத்திற்குமேல் அறவே காற்று வீசுவதில்லை. இங்குக் குறித்த முடிபுகள் இக்காலத்தார் செய்த ஆராய்ச்சியினால் உறுதி செய்யப்பெற்ற உண்மைகளாகும்.

இவ்வுண்மைகளைச் சங்க காலத் தமிழறிஞர்கள் தங்கள் நுண்ணறிவால் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்கள். இத்தகைய பேரறிஞர்கள் சோழன் நலங்கிள்ளியின் ஆட்சிக் காலத்தே தமிழகத்தில் வாழ்ந்துள்ளார்கள். இவர்களது கல்வித் திறத்தை நேரிற் கண்டு வியந்த உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் சோழன்நலங்கிள்ளியின் முன்னர் இன்னோரது கல்வித் திறத்தைப் பாராட்டுவதாக அமைந்த பாடலொன்று புறநானூற்றில் உள்ளது.

செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த
மண்டிலமும்
வளி திரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும்
என்றிவை
சென்றளந் தறிந்தோர்போல
என்றும்
இனைத் தென்போரும் உளரே.
(புறம் 30)

என்பது அப்பாடற் பகுதியாகும். சூரியனது சுழற்சியும் அதனுடைய ஈர்ப்பாற்றலும் (ஆகர்ஷனசக்தியும்) அவ்வாற்றலால் இழுக்கப்பட்டுச்சூரியனைச் சுற்றிவரும் இப்பூமியும், பூமியில் காற்று வீசுந் திசையும், காற்றின்றி வெற்றிடமாகவுள்ள ஆகாயமும் என்றுசொல்லப்பட்ட இவற்றை நேரிற்சென்று கண்டறிந்தவர்போல, இவை சென்றகாலத்து இவ்வாறிருந்தன, இப்பொழுது இன்ன நிலையில் உள்ளன, இனி எதிர்காலத்தில் இன்ன தன்மையை அடைவன என மூன்றுகாலத்தும் அவை பெறுந் தன்மைகளை அறுதியிட்டுச் சொல்லும் கல்வியையுடைய அறிஞர்களும் இந்நாட்டில் வாழ்கின்றார்கள், என்பது மேற்காட்டிய தொடரின்பொருளாகும். ஞாயிற்றின் பரிப்பினால் (சூரியனது ஆகர்ஷண சக்தியால்) பூமி சூரியனைச் சூழ்ந்து வருதலும், வானம் மேலே காற்றின்றியிருத்தலும் ஆகிய உண்மைகள் இத்தொடரிற் சொல்லப்பட்டன. காற்றின்று வெற்றிடமாகவுள்ள விசும்பினை (Region of Ether) 'வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்' எனப்புறம் 365-ஆம் பாடல் குறிப்பிடுகின்றது. வானத்தில் தம்இயற்கையொளியால் மின்னுகின்றவற்றை நாள் மீன்கள் எனவும், பிறவற்றின் ஒளியை வாங்கிக்கொண்டு ஒளிர்வனவற்றைக் கோள் மீன்கள் எனவும் தமிழ்முன்னோர் ஆராய்ந்துபெயரிட்டுள்ளார்கள். இவ்வாறே சங்க நூல்களை ஆராய்ந்தால் அக்காலத் தமிழ் மக்களின் அறிவியலாராய்ச்சியின் நுண்ணுணர்வும் அவ்வுணர்வின் வழித் தோன்றிய அறிவியற் கலைகளைத் தெளிவாக விளக்குதற்குரிய தமிழ்மொழியின் சொல் வளமும் இனிது புலனாகும். தமிழர்கள் தம் தாய் மொழியாகிய தமிழைப் பேணாது மறந்தமையால் சங்ககாலத் தமிழறிஞர்கள் கண்டுணர்த்திய அறிவியல நுட்பங்களையெல்லாம் உலகமுணராதபடி அயலவர் மறைப்பதற்கு இடமுண்டாயிற்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அறிவியலாராய்ச்சியிற் சிறப்புற்று வாழ்ந்த தமிழ் மக்களின் வழித் தோன்றல்களாகிய நாம் இக்கால அறிவியற் செல்வங்களையெல்லாம் தமிழ் வழியே பரப்புதற்கேற்ற வழி துறைகளை வகுத்துக் கொண்டு

(16-ம் பக்கம் பார்க்க)

மதுரை மாவட்ட மாநாடு

—கண்டு வந்தோன்—

"பட்டம் பதவிகளின் படிக்கட்டுகளில் ஏறி ஏறி, இறங்கி, ஏதாவது கிடைக்காதா என்று ஏங்கிடும் ஏமாளிகளல்ல நாம், பட்டிதொட்டிகளெல்லாம் சுற்றிச் சுழன்று சூருவளிப் பிரசாரத்தின்மூலம் பாமரர்களைப் பகுத்தறிவாளர்களாக ஆக்கும் நல்ல பணியிலே ஈடுபட்டவர்கள் நாம். நாம், கழகத்தைத் தனி மனிதன் தேவைக்கு என்று வைக்காமல், நாட்டிற்குப் பொதுவாக உரிமைப்படுத்தியுள்ளோம். தனிப்பட்ட ஒருவரின் சுயநலத்தின் அடிப்படையாக எழும் சர்வாதிகாரத்தையே சட்டமாகக் கொள்ளவேண்டும் என்பதை மறுத்து, கண்ட கண்டபடி கூறியவற்றையெல்லாம் கண்மூடித்தனமாக ஏற்கவேண்டும் என்பதை வெறுத்து, சிந்திக்கும் ஆற்றலை ஒழித்துவிட்டு, முட்டாள்களாகவே இருக்கவேண்டும் என்ற முழு மூட நிபந்தனையை ஒதுக்கி, தான் செய்வது எல்லாம் சரி, ஏன் என்று எவரும் கேட்கக் கூடாது என்ற பாசிச மனப்பான்மையை உதறித்தள்ளி, பண்பைவிட, கொள்கையைவிட, கோட்பாட்டைவிடப் பணமே பெரிது என்ற முதலாளித்துவ மனப்பான்மையை அருவருத்து ஒதுக்கி, பொறாமை, வஞ்சகம், சூழ்ச்சி, சுயநலம், பொய், புனைசுருட்டு, பேராசை, கீழ்த்தரம் ஆகியவைகளில் செய்யப்படும் செயல்களுக்கெல்லாம் ஒத்தூத மறுத்து, கள்ளம், கவடு, சூது வாது அற்ற தூய்மையான அடிப்படையில் நின்று பரந்த நோக்கத்தோடு உயரிய கொள்கையுடன், ஜனநாயக முறையில் நாம் எல்லோரும் திராவிட முன்னேற்ற கழகத்தைத் தோற்றுவித்துள்ளோம்" என்று தோழர் ஆவுடையப்பன்—மாநாட்டிற்கென வந்திருப்போரை வரவேற்றுப் பேசுகையில் கூறினார். அவரது குரலில் பெருமிதம் தொனித்தது.

கேட்டுக்கொண்டிருந்த இதயம் பூரித்தது - ஓராண்டுகள்! இதற்குள் ஐந்து மாநாடுகள் — ஐந்நூறுக்கு மேற்பட்ட கிளைக்கழகங்கள்! இந்த நினைவுடன் மீண்டும் ஒரு முறை, ஆச்சரியம் விரிந்த கண்களுடன் அழகாக அலங்கரிக்கப்பட்ட 'செல்வம் பந்தலை" நோக்கியவண்ணமே இருந்தேன். எனது சிந்தனையும் கண்களும் மேய்ந்துகொண்டிருந்தன.

"என்ன பார்க்கிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே, "உண்மையில் மக்களைப் பார்க்கும்போது என் மனக் கவலைகள் எல்லாம் பறந்துவிடுகின்றன! எவ்வளவு ஆர்வம் வருகிறது தெரியுமா, நமது உழைப்பின் பலனைக் காணும்பொழுது! என்று கூறினார் தோழர் சி. பி. சிற்றரசு.

"என்னென்னவோ எண்ணினார்களே எதிரிகளும்—சிலரும், நாம் கூட்டாகப் புதுக் கழகம் துவக்கிய போது. இப்போது, பத்து மாதங் கூட ஆகவில்லை—அதற்குள் நமது கருத்தைக் கேட்பதில் இவ்வளவு கவலையும் ஆர்வமும் மக்களுக்கு. நினைத்தாலே நெஞ்சம் பூரிக்கிறது. எந்தக் கட்சியும் இவ்வளவு செல்வாக்கை, இவ்வளவு குறைந்த நாட்களில் பெறமுடியாதே. நமக்கு மட்டும் எப்படி முடிந்தது" என்பதைத் தான் எண்ணுகிறேன், என்றேன்.

"இதிலென்ன ஆச்சரியம்! இவரையே கேளேன்—இதுவரை எத்தனை இடங்களுக்குச் சென்றிருக்கிறார் என்று. மாதத்துக்கு நீங்கள் எத்தனை மைல் சுற்றுகிறீர்கள்?" என்று கேட்டார், அருகிலிருந்த தோழர் ஏ. சித்தையன், சிற்றரசைப் பார்த்து,

"எத்தனை மைல்களா? தமிழ் நாட்டில் எனக்குத் தெரியாத மூலை முடுக்கு கூட இன்னும் கொஞ்ச நாட்களில் இருக்காது என்றே எண்ணுகிறேன். இப்போது மாதம் எத்தனை மைல், பிரச்சாரத்துக்கென்று சுற்றுகிறேன் தெரியுமோ?" என்று செலவழித்துக்கொண்டு தனது 'டைரி'யைக் கொஞ்சம் புரட்டிவிட்டு, "சராசரி 2000 மைல்கள் ஒரு மாதத்துக்கு" என்று புன்சிரிப்போடு சொன்னார்.

* *



மாநாட்டுப் பந்தலின் முகப்பு

"இவர்களால் என்ன முடியும்?' என்று எண்ணினர், மாற்றுக்கட்சியினரும், நமது 'மதிப்பைப் பெற்றிருந்த' தலைவரும், நியாயத்தையும் கொள்கையையும் மனதிலேகொண்டு வேதனை தாங்காது, புதுப்பாதை புகுந்தபோது, நம்மை நோக்கி.

"பணபலம் இல்லையே! பத்திரிகைப் பலம் கூட நம்மிடம் கிடையாதே, சேர்த்துக் கொடுத்த நிதி, வளர்த்துத்தந்த பத்திரிகை எல்லாவற்றையும் விட்டுவிடவேண்டுமென்று சொல்கிறீர்களே! முடியுமோ, இயலுமோ!" என்று கேட்டனர், நமது நண்பர்களில் சிலரும்.

சிக்கலான நிலை—சீர்திருத்த முடியுமோ, செப்பனிட முடியுமோ என்ற சிந்தாகூலம் மனதில் நிறைந்திருந்த வேளை. எனினும், புதுப் பாதை கண்டு, கழக வீரர்களின் மன உறுதியையும்சோர்விலா வீர உணர்ச்சியையும்'முதலாக'வைத்து முன்னேற்றக் கழகம் கண்டோம். அதுமுதல், நாடு இதுவரை காணாத பணியைக் கண்டு வருகிறது! தினசரி நாட்டில் பல இடங்களில் நமது பிரச்சார வீரர்கள் இயக்கக் கொள்கைகளைப் பற்றி விளக்கியவண்ணமேயுள்ளனர். நாடாள்வோரும், தங்களது ஆட்சி வேலைகளைவிட 'நாம் எப்படியிருக்கிறோம். நமது போக்கு என்ன? என்று அறிவதையே பெரிது என எண்ணிக் கொண்டிருக்கின்றனர். மக்கள் மன்றத்திலும் நமது எண்ணங்களைக் கேட்கவேண்டுமென்கிற ஆவலும் ஆசையும் வளர்ந்து வருகிறது. மாற்றுக் கட்சியாளர் பொறாமைப்படவும் "நமது மாஜிகள்" மு. கழகம் என்று கூறியாவது தங்களைத் தேற்றிக்கொள்ளவும்வேண்டிய, நிலையில் நாம் வளர்ந்து வருகிறோம்—கண்ணியத்தையும் கட்டுப் பணியையும் நமது நோக்கங்களாகக்கொண்டு.

இயக்கம் வளர்கிறது—நமது எண்ணங்கள் பரவுகின்றன. இந்தப் பத்து மாதங்களில் அமைத்திருக்கும் மாவட்டக் கழகங்களையும், கிளைத் திருக்கும் கிளைக் கழகங்களையும் எண்ணினால்—பொது வாழ்வு புகுந்தோர் எவருக்கும் பூரிப்பும் பெருமையும் ஏற்படவே செய்யும்.

(5-ம் பக்கம் பார்க்க)

சுயபுராணம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

ருந்தது என்று உணர்ந்தவுடன், திரும்பினேன்.

"என்னடா, சுந்தரம் இங்கே வந்தாய்?" என்றான் சங்கரன்.

"வந்தேன், ஏதோ, போகிறேன் திரும்பி, சென்னைக்கு!" என்றேன்.

"நானும் வருகிறேன்" என்றான் என் நண்பன் சங்கரன்.

அவன் உள்ளே அழைத்ததும், தூரத்திலிருந்தபடியே, டிக்கெட் வாங்கிவர அனுப்பிய ஆளைக் காண்பித்தேன். அவன் சிரித்துக் கொண்டே பேசினான். நானும் சிரித்துக்கொண்டேன்.

"இவன் பெரிய ஆளப்பா......... அரைமணிக்குள்ளே ஆயிரம் புளுகுகளை அள்ளி வீசுவான். பெரிய சுயபுராணம் — பலே, பிட் நோட்டீஸ்! என்றாலும் ஊரிலே இருக்கிற பெரிய மனிசன்களை யெல்லாந் தெரியும். எப்படித்தான் சிநேகம் புரிவானோ தெரியாது. மனச்சாட்சியைக் கொன்றுவிட்டு, இதயம் இருக்கிறதென்பதை மறந்துவிட்டு, உலகில் உலவினால், அது சாத்தியமாகும் போலும்!

சொள்ளமுத்து ஊரிலே இருக்கிற எல்லாருக்கும் தெரியும். கிடைக்கிறவன்களை உறிஞ்சிக்கொள்வதிலே பலே ஆசாமி. அவன் பழைய கால அனுபவங்களை எல்லாம் தெரிந்து கொண்டால், உலகத்தை உண்மையாக உணர்ந்து கொள்ளலாம்! வாழ்க்கை வியாபாரத்தை நடத்த இவன் கையாள்கிற முறை மிக எளிதானது —இவன் நடக்கிற பாதை குறுக்குப்பாதை—இந்தமாதிரி மதுரையில மட்டுமல்ல, ஊருக்கு ஒரு ஆசாமி கிடைப்பான். இதிலேயே ஜுனியர் சுயபுராணம், சீனியர் சுயபுராணம் என்றெல்லாம் பார்க்கமுடியும். சொள்ளமுத்து இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கக்கூடியவன!' என்று சங்கரன் கூறினதைக் கேட்டு நான் என் முடிவைச் சொன்னேன்.

"சங்கரா, சொள்ளமுத்துவைச் சொல்வதில என்ன பயன். குற்றவாளி அவன் இல்லை — சமூகம்! வாழ்க்கைப் பாதையை அப்படிக் கெடுத்துவைத்திருக்கிறது!" என்றேன்.

திரும்பிப் பார்த்தோம். திடுக்கிட்டோம். சொள்ளமுத்து டிக்கெட் வாங்காமல் எதிர்ப்புறத்தில் நடந்து விட்டான். நல்லகாலம், பார்த்துவிட்டோம்! கைதட்டி கூப்பிட்டோம். அவன்முகம் விகாரமாகிவிட்டது.

"சில்லரை இல்லையென்றான்...... மாற்றிவரலாம் என்று போனேன்" என்று வார்த்தைகளை மென்று விழுங்கினான். அவன் பொய் சொல்கிறான் என்பதை எழுந்தழுந்தும் நெஞ்சுக்குழி சொல்லாமல் சொல்லி விட்டது!

பிறகு சங்கரன் டிக்கட் வாங்கினான். உள்ளே போனோம். மிஸ்டர் சுயபுராணம் எங்களுடன் வந்தான். வண்டியில் இடம் பிடித்துக்கொடுத்தான். வண்டி நகரப்போகிற நேரத்தில்,

"சார், ஒரு நாலணா கொடுங்களேன், பஸ்ஸுக்கு! பர்சை நான் எடுத்துவர மறந்துவிட்டேன்! உறது தான் உங்களுக்குத் தெரியுமே" என்றான் கொஞ்சமும் கூசாமல்!

பர்சைத் திறந்து நாலணா எடுப்பதற்குள் வண்டி வேகமாக ஓட ஆரம்பித்துவிட்டது! மிஸ்டர் சுயபுராணம் வாயைப் பிளந்தபடியே நின்று கொண்டிருந்தான்!

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் நாட்டுக் கல்வி நிலையங்களிலெல்லாம் எல்லாக்கலைகளையும் தமிழ் வழியே பயிற்றுதற்கேற்ற திட்டஞ் செய்தல் வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் ஈறாகவுள்ள கல்வி நிலையங்களிலெல்லாவற்றிலும் தமிழுக்கே முதலிடந் தருதல் வேண்டும். தமிழ் நாட்டு அரசியலாட்சி முறையும் நீதிமன்றமும் தமிழ் மொழியின் வாயிலாக இயங்கச் செய்தலே நாம் பெற்றுள்ள உரிமை வாழ்வின் பயனாகும் என்பதைத் தமிழ் மக்கள் உணர்தல் வேண்டும். தங்கள் குடும்பத்தில் நிகழும் நலந் தீங்கு குறித்த எல்லா நிகழ்ச்சிகளும் தம்மால் வழிபடப் பெறும் திருக் கோயிலில் நிகழும் வழிபாடுகளும் தம் தாய் மொழியாகிய தமிழ் மொழியின் வாயிலாகவே நடைபெறுதற்கேற்ற வழி துறைகளை வகுத்தமைத்தல் தமிழ் மக்களின் தலைசிறந்த கடமையாகும்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.